கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பிதழ்


இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 136 இதழ் : 22 பக்கங்கள் : 16 திகதி : 25.12.2012 விலை : 25.00





நத்தார் காலத்தில் ஏழைகள், அனாதைகள், அங்கவீனர், இல்லிடமற்றோர், மீள்குடியேற்றத்தினால் துன்புறுவோர் மீது கருணையும் அன்பும் கொண்டு பிறரன்பு, பகிர்வு போன்ற செயற்பாடுகளில் நாம் இணைவோம்.

– யாழ் ஆயர் –

பத்தாவது தடவையாக
நிலத்தில் விழுந்தவனை
பூமி முத்தமிட்டு சொன்னது
நீ ஒன்பது தடவைகள்
எழுந்தாய் அல்லவா?
போரின் வடுக்களையும்
கிபிரின் எச்சங்களையும்
குண்டுகளின் குதறல்களையும்
அவலச் சுமைகளையும்
சமாதிக்குள் புதைத்துவிட்டு
நம்பிக்கை மூச்சுடன்
புலரும் ஆண்டில் பயணிப்போம்
வால்வெள்ளி பெத்லகேமில் அல்ல
எமது தலைமேல்.........

# ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## 2013 "நம்பிக்கை" ஆண்டு உரிமைக்கு அங்கீகாரம் ???

வருகின்ற ஒவ்வொரு புத்தாண்டிலும் மக்கள் ஏதோ ஒரு மாற்றத்தை எதிர்ப்பார்ப்பது வழமைதான் ஆனால் சொல்லும்படியாக எதுவும் நடந்து விடுவதில்லை. மாற்றம் ஒன்றே மக்களின் வளர்ச்சி அதுதான் நாட்டினதும் உலகத்தினதும் முன்னேற்றம். ஐரோப்பிய நாடுகள் மாற்றங்களை காணுகின்றன. மக்களின் மனங்களில் புத்துணர்ச்சி மேலிடுகின்றது. ஆனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கவலை, துன்பம், ஏக்கம், பொருளாதார சுமை அதிகரிக்கின்றது. எந்த சமூகமும் நிம்மதியாக இருந்ததில்லை.

இனமோதல், போட்டி, பொறாமை, அகங்காரம், சகிப்புத்தண்மை இல்லாமை, இறை நேசத்தின் பற்றாக்குறை இவை தான் நிம்மதியற்ற நிலைமைக்கு காரணம் என்று பிறந்த குழந்தைக்கும் தெரியும். இங்கு மானிடம் மதிக்கப்படுவதில்லை என்று பிறக்கும் குழந்தை கருவிலேயே உணர்கின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற நோக்கில்தான் கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தை 16ஆவது ஆசிர்வாதப்பர் பிறக்கவுள்ள 2013ஆம் ஆண்டை "நம்பிக்கை" ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார் போலும். வரலாறுகளின் படிப்பினைகளில் இருந்து மூன்றாம் உலக நாடுகளை மீட்பதற்காக பாப்பரசர் நம்பிக்கை ஆண்டாக பிரகடனம் செய்து மாற்றம் ஒன்றை காண முற்படுகின்றார் என்பது மட்டும் உண்மை.

அதற்கு வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் "நம்பிக்கை" என்று பிரகடனம் செய்து நம்பிக்கையுடன் வளர்முக நாடுகளுக்கு உதவுங்கள் என்ற செய்தியையும் திருத்தந்தை ஐரோப்பிய நாடுகளுக்கும் விடுத்திருக்கின்றார்.

கடந்த அறுபது ஆண்டுகள் சிக்கித் தவிக்கும் எமது நாடு மீட்சி பெறவேண்டும். ஒரு இனத்தின் உரிமையை சுதந்திரத்தை மதிப்பது மற்றுமொரு இனத்தின் இருப்புக்கு ஒருபோதும் சவாலாக அமையாது என்ற உண்மையை நம்பிக்கையுடன் ஏற்க வேண்டும். நில அபகரிப்பு, அச்சுறுத்தல், கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்பில் பாகுபாடு, குடியேற்றம், என்ற நடைமுறைகள் மூலம் தமது இனத்தின் மத்தியில் செல்வாக்கை செலுத்தி ஆட்சியை தக்க வைக்கலாம் என்ற தவறான நம்பிக்கையை ஆட்சியாளர்கள் கைவிட வேண்டும். மாறாக மக்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய பிரதேசங்களின் மரபுகளையும் ஒழுக்கங்களையும் தேசவழமைகளையும் பேணி காப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவதன் மூலமே இனங்களிடையேயான நம்பிக்கையை ஆட்சியாளர்களினால் கட்டியெழுப்ப முடியும்.

மொழியால் வேறுபட்டிருந்தாலும் கத்தோலிக்க திருச்சபையின் குடும்பம் என்ற அடிப்படையில் இன நல்லுறவுகளை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களை யேசுவின் பிறப்பின் நம்பிக்கையுடன் இறைபணியாளர்கள் முன்னெடுக்கலாம்.

ஆடம்பரங்களை தவிர்த்து செலவுகளை மட்டுப்படுத்தி போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரியலாம். மீளக்குடியமர்ந்த மக்களுடன் மனம்திறந்து உரையாடி அவர்களின் வாழ்வில் நம்பிக்கையை கட்டியெழுப்பலாம். ஏற்றுத் தாழ்வுகளை நீக்கலாம். ஒவ்வொரு ஆலயங்களிலும் குழுக்களை அமைத்து நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான விழிப்பணர்வு கூட்டங்களை மாதம் தோறும் நடத்தலாம். பாடசாலைகளில் கருத்தரங்குகளை நடத்தலாம்.

பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் கத்தோலிக்க சமயக் கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்கள் "நம்பிக்கை" ஆண்டின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு விரிவுபடுத்தலாம் இந்த சிறிய முயற்சிகள் 2013ஆம் ஆண்டை நம்பிக்கைப் பாதையில் இட்டுச் செல்லும்.

இதனை கவனத்தில் எடுங்கள். இது திருத்தந்தையின் நம்பிக்கை மாத்திரம் அல்ல நமது தலத்திருச்சபையின் எதிர்பார்ப்பும் கூட.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்
ஆசிரியர், "பாதுகாவலன்" கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
Email : editorkavalan@gmail.com

## திருத்தந்தையின் அனைத்துலக அமைதி நாள் செய்தி



புலரும் ஒவ்வொரு புதிய ஆண்டும் நமக்கு நல்லவைகள் நடைபெறும் என்ற நம்பிக்கையோடு பிறக்கிறது. இதன் அடிப்படையில் மனிதகுலம் அனைத்தும் மகிழ்விலும் அமைதியிலும் வளமான வாழ்வில் இவ்வாண்டு அடியெடுத்து வைக்க வேண்டுமென்று அனைத்து மனித குலத்தின் தந்தையை வேண்டுகிறேன் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தன் அனைத்துலக அமைதி நாள் செய்தியில் கூறியுள்ளார்.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் திகதி அனைத்துலக அமைதி நாள் என்று கத்தோலிக்கத் திருஅவையால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளுக்கென திருத்தந்தை "அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்" என்ற தலைப்புடன் அளித்துள்ள சிறப்புச் செய்தி வத்திக்கானில் வெளியிடப்பட்டது.

நன்மைகளும், பிரச்சனைகளும் நிறைந்த உலகமயமாக்கல் என்ற வழிமுறையில் வாழும் நாம் போர்களையும், போராட்டங்களையும் சந்திக்கிறோம் என்றும், அனைத்து மனிதருக்கும் முழு மனித நலனை உருவாக்கும் புதிய வழிகளைக் கண்டு பிடிக்க நமக்குச் சவால்கள் விடுக்கப்படுகின்றன என்றும் தன் செய்தியை ஆரம்பித்துள்ளார் திருத்தந்தை.

கடவுளின் கொடையும், மனித முயற்சியும் இணைவது அமைதியில் வாழ்வை அதன் அனைத்து அம்சங்களிலும் காப்பவர்களே உண்மையில் அமைதி ஏற்படுத்துவோர், பொருளாதார முன்னேற்றம் புதிய வழிகளில் சிந்திக்கப்படுவதன் வழியாக உருவாகும் அமைதி, அமைதி கலாச்சாரத்தை வலியுறுத்தும் புதிய கல்வியும், இக்கல்வியைப் புகட்டுவதில் குடும்பங்களின் பங்கும் என்று பல அழகிய அம்சங்களைத் தாங்கி வரும் இச்செய்தியை திருத்தந்தை ஏழு பகுதிகளாக வழங்கியுள்ளார்.

அமைதியின் தூதர்கள் முக்கியமாக இறைவனுடன் தொடர்பு கொண்டுள்ள ஆன்மீகத்தில் பக்குவப்பட்டவர்களாகவும் விளங்க வேண்டும் என்று திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார்.

திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் 1968ம் ஆண்டு ஜனவரி முதல் திகதி உலக அமைதி நாள் உருவாக்கப்பட்டது. இப்பாரம்பரியத்தைத் தொடர்ந்து. 2013ம் ஆண்டு ஜனவரி முதல் திகதி 46வது உலக அமைதி நாள் கத்தோலிக்கத் திரு அவையால் கொண்டாடப்படுகிறது.

## நம்பிக்கை ஆண்டின் கிளி/முல்லை மறைக்கோட்டத் திட்டங்கள்

கிளி/முல்லை மறைக்கோட்டத்தில் பணிபுரியும் எல்லாக் குருக்களும், துறவற சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளும், பங்குகளின் பிரதிநிதிகளான இறைமக்களுமாக 39 பேர் ஒன்று கூடி நம்பிக்கை ஆண்டின் திட்டங்களை வகுத்தனர்.

இந்நிகழ்வை கிளி/முல்லை மறைக்கோட்ட முதல்வரும் கியூடெக் நிறுவன இயக்குனருமான அருட்பணி. யாவிஸ் அடிகளார் தலைமையேற்று நடத்தினார். நெறிப்படுத்தும் வளவாளராக யாழ்/ இளையோர், பொதுநிலையினர், அன்பிய ஆணைக்குவின் இயக்குனர் அருட்பணி. இரவிச்சந்திரன் அடிகளார் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செயற்படுத்தினார்.

குழு ஆய்வின் பொது அமர்வை அருட்பணியாளர்கள். ஆனந்தகுமார், இரவிச் சந்திரன், யாவிஸ், மயூரன் இணைந்து நடத்தினர். சிறப்பாக கிளி/முல்லை மறைக் கோட்டம் முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவராலும் கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்பட்டன. அவையாவன:

1 ஆலயங்களில் கார்த்திகை 25ம் திகதி (கிறிஸ்து அரசர் திருநாள்) "நம்பிக்கையின் ஆண்டு" அங்குரார்ப்பணம்.

2 வளவாளர் குழு தெரிவு – (மார்கழி)

3 இளையோர் வீதி நாடகம் - (தை)

4 பங்கு ரீதியான விழிப்புணர்வுக் கருத்தமர்வு – (மாசி)

5 நற்கருணை மாநாடு - (ஆடி)

6 பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடாத்துதல் - (ஆவணி)

7 கண்காட்சி நடாத்துதல் - (ஆவணி)

## யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் பிரசீடியவிழா

18.11.2012 ஞாயிறு காலை திருப்பலியுடன் ஆரம்பமாகிய மரியாயின் சேனையாளரின் பிரசீடிய விழா பங்குத்தந்தை அருட்பணி றெஜி இராஜேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகியது. இவ்விழாவில் ஆண்களும், பெண்களும், யுவதிகளும் வெண்ணிற ஆடை அணிந்து பிரசீடியங்களின் கொடிகளுடன் சுடர்ஒளிகளையும் கையில் ஏந்தியவர்களாக குருவுடன் இணைந்து பவனி சென்ற காட்சி புத்துணர்வை ஊட்டுவதாக அமைந்திருந்தது.

மேலும் திருப்பலியில் மறையுரையை ஆற்றிய பங்குத்தந்தை "மரியாயின் சேனையின் மகத்துவத்தை மற்றவர்களுக்கு அறிவித்து அனைவரையும் அன்னையைப்போல் பிறரன்புப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுத்தவே இவ்விழா எடுக்கப்படுகிறதென்றார்.

இந்நிகழ்வில் கொமிற்சீயத் தலைவி திருமதி. யோ. புஸ்பசீலி உபதலைவர் திரு. கருணைநாயகம், செயலர். திருமதி. ஆ. புனிதம் பொருளாளர் திருமதி. ஜஸமின் ஆகியோர் பங்கு பற்றி சிறப்பித்ததுடன், மாதாவின் மகிமை பற்றியும், புதுமைகள் பற்றியும் உணர்ச்சி ததும்ப கண்ணீர்க் கதைகள் பலரும் கூறினர்.

ஈற்றில் ஜே. ஈ. இராசநாயகம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# முதல் இந்தியப்பொதுநிலையினர் முத்திப்பேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்

தென் இந்தியாவின் பொதுநிலையினரில் முதல் மறைசாட்சி இறைஊழியர் தேவசகாயம் இம்மாதம் முற்பகுதியில் தமிழ் நாட்டின நாகர் கோவில கார் மேல் உயர் நிலைபபள்ளி வளாகத்தில் முத திப் பேறு பெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். திருப்பீட புனிதர் பட்டமளிப்புப் பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ தலைமையில் நடைபெற்றது. இந்த முத்திப்பெற்ற நிலை அறிவிப்புத் திருப்பலியில் இந்தியாவின் அனைத்துக் கர்தினால்கள் நாடு முழுவதிலிமிருந்து 50க்கும் அதிகமான ஆயாகள் 500க்கும் அதிகமான அருட்பணியாளர்கள் 1500க்கும் அதிகமான அருட்சகோதரிகள் உடபட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுநிலையினர் கலந்து கொண்டதாக கோட்டாறு ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் பாதுகாவலனுக்கு தெரிவித்தார். இந்த நிகழ்வு குறித்து ஆயர் மேதகு பீட்டா ரெமிஜியுஸ் ஆண்டகை மேலும் கூறுகையில் நம்பிக்கை ஆண்டின் இந்த அறிவிப்பு இறை கொடை என்று கூறினார்.



1712ம் ஆண்டு ஏப்ரல் 23ம் திகதி கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தில் இந்துக் குடும்பத்தில் பிறந்த நீலகண்டன் பிள்ளை திருவிதாங்கூர் அரசவையில் முக்கிய பணியாற்றி வந்தார். கிறிஸ்தவராக மனம் மாறியதால் பல கொடுந் துன்பங்களுக்குப் பின்னர் 1752ம் ஆண்டு ஜனவரி 14ம் நாளன்று ஆரல்வாய் மொழிகாற்றாடி மலையில் மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார்.

# முத்தோர் ஒன்றுகூடல் மையம் ஆரம்பம்

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் "முதியோர் சமூக இசைவாக்கல் நிகழ்ச்சித்திட்டம்" ஆயர். தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை ஆசியுடன் "அருட்கதிர்" இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது.




இந்நிகழ்விற்கு யாழ் பேராலய பங்கு மட்டத்தில் 70 பேர் தெரிவாகி 23.11.2012ல் "அருட்கதிர்" இல்லத்தில் ஒன்று கூடினர் கியூடெக் - கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி. றெக்னோ அவர்களின் வரவேற்புரையில் வயோதிபர்கள் கடைசிக் காலங்களில் தனிமையில் வாடுகின்ற வேளையில் அரவணைப்பும் மகிழ்ச்சிப் படுத்தலும் தேவை என்பதனையும் மகிழ்ச்சியாக இருப்பது பல நோய்களிலிருந்து ஓரளவிற்கு விடுதலை பெறுவதற்கும் இது வழிவகுக்கும். அத்தோடு இதற்கு உதவி செய்ய முன் வந்த லண்டனில் வசிக்கும் வைத்திய கலாநிதி. ஆனந்தி கமலநாதன் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

பிரதம விருந்தினராக வருகை தந்த ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தம்முடைய ஆசி உரையில் முதியோரின் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுவது தனிமை. இவர்கள் தனிமையாகக் காணப்படுவதால் அவர்கள் உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். இதனால் வேறு நிகழ்வுகளையும் சந்தர்ப்பங்களையும் எதிர்பார்த்து உள்ளனர். கடைசிக் காலத்தில் சந்தோஷத்தை அனுபவிக்க ஓர் சந்தர்ப்பமாக முதியோர் ஒன்று கூடலை ஏற்பத்தியதை நன்றாகப் பயன்பத்திக் கொள்ளுங்கள் முதியோரின் மகிழ்வான வாழ்வுக்கு மருத்துவ தேவைகளும் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் ஒன்றுகூடல்களும் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து அனுபவங்களை மீளக் கலந்துரையாடும் போது பலருடைய மனப் பாரங்களைக் குறைப்பதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமையும். இதனை ஒங்குபடுத்தி இந்த இல்லத்தில் கூடி மகிழ திட்டமிட்ட கியூடெக் கரித்தாஸின் முயற்சி பாராட்டத்தக்கது என்றார்.

இந்நிகழ்வு தொடர்பான விளக்க உரையைத் தொடர்ந்து பங்கு பற்றியவர்களிடம் எதிர்காலத் திட்டத்திற்கான சில உள்ளீடுகளைக் கலந்துரையாடவும் அவர்களின் பின்னூட்டலைப் பெறவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

# புலனாய்வு அறிக்கையிடல் நூல் வெளியீடு



அருள்திருருபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் ஊடகவியல் சார்ந்த 10வது நூலான புலனாய்வு அறிக்கையிடல் எனும் நூல் பிசப் சௌந்தரம் மீடியா சென்றறில் யாழ் பல்கலைக்கழகஊடகவியல் மற்றும் பிசப் சௌந்தரம் மீடியா சென்ரர் பாரதியார் பல்கலைக்கழகஊடகவியல் மாணவர்களுடன் அண்மையில் வெளியிடப்பட்டது. முதற் பிரதியை யாழ் பல்கலைக்கழக ஊடகவிரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா போராசிரியர் சிவலிங்கராஜாவிடம் பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியரையும் படத்தில் காணலாம்.

# ஆயர் எல். ஆர் . அன்ரனி காலமானார்



திருமலைமட்டக்களப்பு முன்னாள் ஓய்வுநிலை ஆயர் எல் ஆர்.அனரனி கடந்த டிசெம்பர் 3ம் திகதி இறைவனடி சேர்ந்தார். கரம்பனை சேர்ந்த ஆயர் எல்.ஆர்.அன்ரனி அவர்கள் 1954ம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி உரோமை நகரில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். இவர் 1968ம் ஆண்டுயாழ் மறைமாவட்டத்தின் துணை ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டுபின்னர் 1974ம் ஆண்டு திருமலை மட்டுநகர் ஆயராக நியமிக்கப்பட்டார். மக்களின் ஆயர் என்று வர்ணிக்கப்படும் ஆயர் அவர்கள் 10 ஆண்டுகளிற்கு மேலாக தம் மறைமாவட்டத்தில் ஆயராக பணிபுரிந்தவர்.

ஆயரின் நல்லுடல் திருமலை ஆயர்இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருமலை மரியன்னை பேராலயத்தில் டிசெம்பர் 6ம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் இறுதியாத்திரைத் திருப்பலியில் திருத்தந்தையின் இலங்கைக்கான தூதுவர் பேராயர் மேதகுயோசவ் பட்டரி அவர்களும் இலங்கை ஆயர் பேரவையைச் சேர்ந்தஅனைத்துஆயர்களும் பலமறைமாவட்டக் குருக்கள், துறவிகள் பொதுநிலையினர் கலந்துகொண்டு தமது அஞ்சலியை செலுத்தினர்.

மறைந்த ஆயர் எல். ஆர்.அன்ரனிஅவர்கள் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார், திருக்குடும்ப கனனியர் சபை சகோதரி அருட்சகோதரி அன்ரனெற் அவர்களின் மாமனாரும் ஆவார். ஆயரின் பிரிவால் துயருறும் உறவுகளுக்கு பாதுகாவலன் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

# யாழ் துறவற சபைகளின் திருவருகைக் கால ஆயத்த ஒன்றுகூடல்

UNIVERSITY OF ... LIBRARY ... PERIODICAL ...



யாழ் மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவற சபைகளை சார்ந்த குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 13-12-2012 அன்று ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. மீட்பர் இயேசுவின் வருகைக்காக தங்களை தியான வழியில் ஆயத்தம் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஒன்றுகூடலை யாழ் ஆயர் அவர்கள் சிறப்பித்து விசுவாச ஆண்டாகிய இவ்வாண்டு துறவிகள் செபத்தின் வழி விசுவாச முதிர்ச்சிக்குள் வளர அழைப்பு விடுத்தார். இந்த ஆயத்த நாள் கருத்தமர்வை சிறப்பான முறையில் திவ்விய நற்கருணை துறவற சபையைச் சேர்ந்த அருட்பணி. ஜஸ்ரின் சௌகான் அடிகள் நெறிப்படுத்தினார். திவ்விய நற்கருணையின் அனுபவத்திலும் விசுவாசத்திலும் துறவிகள் நாள்தோறும் கிறிஸ்து யேசுவின் அன்பிற்குள் வளர்ந்து அவரது சாட்சிகளாய் வாழும்படி அழைத்து நின்றார். நிகழ்வில் கலந்துகொண்ட குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளாரும் அமலமரித்தியாகிகள் சபை முதல்வர் அருட்பணி. ம. போல நட்சத்திரம் அடிகளாரும் தமது கிறிஸ்து பிறப்பு செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

# தொழுவத்தில் கடவுளா? இதுவா எனது கிறிஸ்மஸ்?

ஆண்டின் இறுதி வாரங்களில் அவசர அலுவல்களில் இளைத்துக் களைத்த நிலையில் ஒரு சில கணப் பொழுதுகள் ஆசுவாசமாக மூச்சுவிட முடிந்தது. அப்பொழுதுதான் அந்த எளிய வடிவில் அமைந்த பாலன் கொட்டில் என் எண்ணங்களை ஈர்த்தது அப்போது கிடைத்தது அத்தெய்வீக தரிசனம்.

கார் மேகங்கள் சூழ்ந்த காரிருள், கடுங்குளிர், எதிர்பாராது வந்த ஒளிப்பிரவாகம், அஞ்சி நடுங்கும் ஆட்டிடையர், அவர்தம் அச்சம் அகற்றி ஆறுதல் கூறி ஆனந்தமான செய்திகள் கூறும் வானகத்தூதர். அது என்ன? மாட்டுத் தொழுவத்தில் மீட்பர் மெசியாவா? எனது ஆச்சரியம் பன்மடங்கான வேளையில் அத் தூதன் திரளான ஒரு கூட்டம் இறைதூதர்களுடன் இணைந்து கொண்டு உன்னதரைப் பாட ஆரம்பித்தான், அதற்கும் மேலாக இன்னொரு அதிசயம் செய்தி கேட்ட மறுகணமே எவ்வித கலந்துரையாடலகளோ இன்றி சந்தேகத்திற்கு இடமளியாது செய்திக்கு மதிப்பளித்து கீழ்ப்படிந்து விரைந்து சென்று குழந்தையைத் தரிசிப்பதில் மகிழ்வடைகின்றனர். சாமக்காவலில் நின்ற அவ் ஏழை இடையர்கள் என்னால் நம்ப முடியவில்லை அவர்கள் விசுவாசத்தை. குழந்தையின் அருகில் ஏழைக் கோலத்தில் சூசையுடன் மரி. இவ்விடத்தில் என் எண்ணங்களைக் குடைந்த வினா, "மெசியா ஏன் ஏழையாகப் பிறக்க வேண்டும்? இச் செய்தி ஏன் ஏழை இடையர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்? என்றோ வாசித்த நினைவு.

"தாவீதின் அரியணையைக் கடவுள் அவருக்கு அளிப்பார்" *(லூக் 1-32)* இவ் வார்த்தைகளுக்கும் நான் பார்க்கும் கோலத்திற்கும் எந்தத் தொடர்புமில்லையே.

"இங்கே இடமில்லை" என்று கூறிய விடுதிக் காப்பாளருக்கு இதயமே இருக்கவில்லையா? அல்லது அக்குழந்தையின் மகத்துவம் அறியாத குருடராய் இருந்தனரா? இல்லை பணம் கண்ணை மறைத்து விட்டதா? விடை எதுவோ? மீட்பர், மெசியா மாட்டுத் தொழுவத்தில் காணப்படுவது மனதை நெகிழ வைப்பதே.

ஒருவேளை இது இறைவனின் சித்தமோ? ஆடு மாடுகளால் சூழப்பட்டு கந்தையில் பொதியப்பட்டு கடவுளின் மைந்தன் கண் துயிலும் காட்சி கல் மனதையும் கண நேரம் அதிரச் செய்யும். ஆச்சரியப்பட வைக்கும் உலக மீட்பர் மெசியா தன்னையே வெறுமையாக்கி மானிட உருவில் அவதரித்தார்.

இப்பொழுது என்னால் ஓரளவு உணர முடிந்தது. தீர்க்கதரிசிகளையும் இறைவாக்கினரையும் ஏற்றுக் கொள்ளாத வணங்காக் கழுத்துள்ள மக்களைத் தன்பால் மீண்டும் ஈர்த்துக் கொள்ள இறைவன் செய்த ஏற்பாடு. தனது ஒரே பேறான குமாரனையே உனக்கும் எனக்கும் பரிசாகத் தந்த மகத்துவமான அன்பின் வெளிப்பாடு.

இதுவே கிறிஸ்மஸின் கதை. ஓடியாடித் திரிந்த பள்ளிப் பராயத்தில் புத்தாடை, பலவித உணவுகள், பரிசுப் பொருட்கள், கரோல் வேடிக்கை, பாலன் குடில்..... என்று எனது வட்டம் குறுகியிருந்தது. ஆண்டுகள் உருண்டோட குருவாகத் திருநிலைப்படுத்திய பின்னர் எனது பார்வையே வேறு. நள்ளிரவு ஆராதனை, ஆலய அலங்காரம் நத்தார் செய்தி, ஏழை மக்களின் தேவைகளை அறிதல பகிர்தல் என்ற பரந்த வட்டம் விரிந்தது.



பால வயதில் பெறுவதிலிருந்த மகிழ்ச்சி தற்போது கொடுப்பதில் கிடைத்தது. கொடுபபதில் கிடைக்கும் மகிழ்ச்சியே உண்மையான கிறிஸ்மஸ் செய்தி.

உண்மையான மகிழ்வு எதுவென்று தெரியாமல் பணம் புரட்டுவதிலும் பதவி தேடுவதிலும், புகழ் சம்பாதிப்பதிலும் ஓடிக்கொண்டேயிருக்கும் இவ்வுலகம் ஓடியோடி உழைத்ததை அனுப வித்து வாழ முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் இவ்வுலகம் ஒரு கணம் தரித்த இக்காட்சியைக் கண்டுணராதா? இன்னும் சில வீடுகளில் கிறிஸ்மஸ் வந்துவிட்டால்மன அழுத்தங்களும் சேர்ந்தே வருகிறது. கடந்த முறையை விட இம்முறை சிறப்பாகச் செய்வதிலேயே கையிலுள்ளதெல்லாம் செலவு செய்து தெபழுவத்தில் பிறந்த குழந்தையை மகிழ்விப்பதாகக் கூறுவர். இதனால் ஏற்படும் பிரச்சனை அடுத்த ஆண்டிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். இவை தேவைதானா?

இந்த 2012ல் வரும் கிறிஸ்மஸ் உன்னையும் என்னையும் ஒருகணம் மகிழவைப்பதற்காக எமது உதவிக்கரம் நீளாதா? அன்பான பார்வை, ஆறுதலான வார்த்தை, கனிவான பேச்சு, ஐக்கிய உறவு!!

ஆலயங்களிலும் வீடுகளிலும் நாம் பார்க்கும் பாலன் குடில் எமது எண்ணங்களை மாற்றாதா? பலதடவை எமக்குள் மாற்றம் வேண்டுமென்று எண்ணியும், கேட்டும், துணிந்தும் இருக்கின்றோம். ஆனால் ஒரு சில தினங்களில் அவையெல்லாம் மறந்துவிட்டு பழைய மனிதனையே ஆடையாக அணிந்து திரிகின்றோம். இத்தடவை இறைவனின் உதவியுடன் மீண்டும் கடினமாக முயற்சிப்போம். ஆறுதலின் மகனாக, மகளாக மாறுவோம். இம்மாற்றம் இருளில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு மாற்றம் தரும் ஒளியாக மாறும். இதை ஏற்பதும் முடிப்பதும் எம் பொறுப்பு.

கிறிஸ்மஸ் காலம் எம்மையும் எமது சூழலையும் சுகந்தம் வீசச்செய்யும் அற்புதமான காலம். நீண்டகால வரட்சியால் பாதித்துள்ள பாலை நிலங்களுக்கு நீரூற்றுக்கள் கிடைக்கச்செய்யும் காலம். ஆதாமின் காலம் தொடக்கம் மாற்றமில்லாது வாழ்ந்து வந்த மனித குலத்திற்கே மாற்றம் கொண்டுவந்த காலம்.

ஆண்டாண்டு காலம் கிறிஸ்மஸ் வரலாம் ஆனால் மனமாற்றம் ஒருதடவைதான் வரும். அது ஏன் இந்த ஆண்டாக இருக்கக் கூடாது? நாம் இன்னும் பால வயதினர் போல் இந்த கிறிஸ்மஸையும் செலவழிக்கப் போகிறோமா? அல்லது உங்களுக்கும் எனக்கும் கிடைத்த மீட்பின் பரிசை, சமாதானத்தின் பரிசை, அமைதியின் பரிசை எமது தாரளமான செயற்பாடுகளால் அடுத்தவருக்கும் எடுத்துச் சொல்லி உண்மையான கிறிஸமஸ மகிழ்வைப் பகிர்ந்து கொள்ளும் அறுபுத காலமாக மாற்ற முன்வருவோம்.

அருட்பணி. போல் ராஜ் எழுதிய ஆங்கில ஆக்கத்தின்
தழுவல் தமிழில் கிறிஸ்ரின் Y.R

# நத்தார் கெரோல் கீதங்கள்



நத்தார் தினம் எனும போது "கெரோல் கீதங்கள்" இன்றியமையாத ஒனறாக அமைந்துள்ளது. வண பிதா பிரான்சிஸ அவர்களால் இயேசு பாலன் குடில் அமைத்து இதன் முன் முழங்கால் படிந்து முதன் முதலில் பாடிய பாடலே முதலாவது கெரோல் கீதம் எனக் கருதப்படுகின்றது.

"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் பூமியில் நல்மனத்தோருக்கு அமைதியும் உண்டாவதாக" என்ற பரிசுத்த வேதாகமத்தின் வசனத்தை அக்கரோல் கீதம் உள்ளடக்கி இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் நத்தார் தினமாகிய டிசம்பர் 25ம் திகதிக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பிருந்தும் 25ம் திகதிக்குப் பின்வரும் சில நாட்கள் வரையும் கெரோல் கீதங்கள் பாடப்படும். கெரோல் வண்டி, கெரோல் கீதங்களைப் பாடியபடி ஊர்களில் வலம் வரும்.

உலகின் மிகப் பிரபலமான, புகழ் பூத்த, பழைமையான கெரோல் கீதமாக விளங்குவது "அமைதி இரா.... தூய இரா....." (Silent night.....) என்ற பாடலாகும். 1816ம் ஆண்டு இயற்றப்பட்ட இப்பாடல் ஏறக்குறைய 200 ஆண்டுகளாக உலகின் நாலா திசைகளிலும்பாடப்பட்டு வருகின்றது. அமெரிக்க சிவில் யுத்த நேரத்தில் உருவான "ஜிங்கில் பெல்ஸ்" (Jingle Bells) எனும் கெரோல் கீதம் உலகப் புகழ் பெற்றது. அதன் பின் உருவான "On little town of Bethlehem" எனும் கெரோல் கீதமும் உலகப் புகழ் பெற்றது.

1983 இல் முதன் முதலாக வானொலியில் கெரோல் கீதம் இசைக்கப்பட்டது. "கெரோல்ஸ் பை கென்டில் லைட்" எனும் நிகழ்ச்சி மூலம் அவுஸ்ரேலிய வானொலி இதனை ஒலிபரப்பியது.

சிந்து
அல்லாரை தூய செபமாலை
அன்னை ஆலயம், மிருசுவில்.

# கிறிஸ்மஸ் தாத்தாவும் தேவ தூதர்களும்



குழந்தைகளைக் குதூகலிக்க வைக்கும் கிறிஸ்மஸ் தாத்தா நத்தார் கொண்டாட்டங்களில் முக்கிய விருந்தினர் ஆவார். "செண்டோக்ளோஸ்" என அழைக்கப்படும் இவர் துருக்கி நாட்டில் இருந்து உலகிற்கு அறிமுகமானார். புனித நிக்கிலஸ் என்பவர் அங்கு ஏழைக் குழந்தைகளுக்கு நத்தார் தினத்தன்று பரிசில்கள் வழங்கினார். தன் வாழ்நாள் முழுவதும் தனது சொத்துக்கள் முடியும் வரை இவ்வாறு பரிசில்கள் வழங்கிய அவர் கி.பி. 341 டிசம்பர் 06ம் திகதி அன்று இவ்வுலகை விட்டுச் சென்றார். அவரைத் தொடர்ந்தே இவ் வழக்கம் உலகெங்கும் பரவியது.

இயேசுவின் பிறப்பை முதன் முதலாக உலகெங்கும் பரப்பிய தேவ தூதர்களை 17ம் நூற்றாண்டு முதல் இத்தாலி நாட்டில் அமைக்கப்பட்ட நத்தார் குடில்களில் அறிமுகப்படுத்தினர். நாளடைவில் இது உலகெங்கும் பரவியது. தேவ தூதர்கள் சாந்தி மற்றும் சமாதானத்தின் அடையாளமாகக் கருதப்படுவதால் பின்னர் வீடுகள் தோறும் அலங்காரத்துக்குப் பயன்படுத்தினர்.

ஞா. பிரகாஷ்
அல்லாரை புனித செபமாலை
அன்னை ஆலயம்

நத்தார் மரத்தைச் சூழ எத்தனை
விதமான வெகுமதிகளும்
காணப்படலாம்.
இவையெல்லாவற்றிலும் சிறந்த பரிசு
குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும்
மகிழ்வுடன் இக்காலத்தில்
ஒன்றிணைவது.

★ ★ ★

கிறிஸ்மஸ் காலம் அவசியமானது
இந்நாளில் தான் எமது ஓட்டத்தின்
வேகத்தைக் குறைத்து எம்மையும்
எம் அயலையும் ஒருதடவை சுற்றிப்
பார்க்கின்றோம்.



# நிலவு எப்ப வரும்?

## சிறுகதை

கந்தல் பாயில் குழந்தையைக் கிடத்தி கிழிந்த 'பெட்சீற்றால்' போர்த்தி விட்டு வீட்டு வாசலில் வந்து உட்கார்ந்தாள் அனிதா. அந்த நடுச்சாமத்திலும் தூக்கம் அவள் கண்களை தழுவ மறுத்தது. நத்தார் சாமப்பூசைக்கு வீதியால் போவோரைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுப் விட்டாள். வானத்து கருமேகத்தைப் போல் தன் வாழ்விலும் கருமேகம் சூழ்ந்துள்ளதை கண்ணீருடன் நினைத்த வண்ணம் தான் கடந்து வந்த பாதைகளை ஒரு கணம் திரும்பிப் பார்த்தாள்.

அந்த இரட்டை சடைப்பின்னலுடன் வயல்வெளிகளிடையே புள்ளிமானாய் துள்ளித் திரிந்த காலம் அவளது காலம். வெள்ளை சீருடையில் கைகளிலே புத்தகங்களை சுமந்து கொண்டு வயல் வரம்புகளிலே நடைபோடும் அவளது பாதங்கள் உயர்கல்விக்காக அவளை பல்கலைக்கழகம் அழைத்துச் சென்றிருந்தது. அங்கும் அவள் பல ஆடவர்களின் கனவுக்கன்னியாய் வலம்வந்து பல நாட்கள் அவர்களது தூக்கத்தையே கலைத்திருந்து மீண்டும் தன் கிராமம் வந்து சேர்ந்திருந்தாள். கிராமத்திலே வளர்ந்து கண்டிப்புமிகு தந்தையால் வளர்க்கப்பட்டிருந்ததால் அவள் எவரையுமே ஏறெடுத்தும் பார்க்கவில்லை. உயர் கல்வியை முடித்து பல்கலைக்கழகத்தால் வெளியேறி தன் கிராமம் வந்து சேர்ந்தவள் வேலை தேடும்படலத்தில் இறங்கியிருந்தாள். விண்ணப்பங்கள் பலவற்றை பூர்த்தி செய்து பல நிறுவனங்களிற்கும் அனுப்பிவிட்டு தன் பொழுதுபோக்கை அயல்வீட்டு சிறுவர்களிற்கு கல்வி கற்பிப்பதிலும் வயல் வேலைகளில் ஈடுபடுவதிலும் தன் நேரத்தை செலவிட்டுக்கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் தான் அவளது கலியாணப்பேச்சு தடல்புடலாக இடம் பெற்றுக்கொண்டிருப்பது தெரியவந்தது. அண்ணனும் அம்மாவும் இரகசியம் பேசுவது அனிதாவின் காதுகளில் அரசல்புரசலாக விழத்தான் செய்தது.

"அம்மா எனக்கு கலியாணம் வேண்டாம். MA படிக்கணும், வேலையை கையிலெடுத்துக் கொண்டு கொஞ்ச காசு சம்பாதித்துக் கொண்டு பிறகு தான் கலியாணத்தைப்பற்றி யோசிக்கப்போறன். அதுக்காகத்தான் தாமதித்துக் கொண்டிருக்கிறன் என்ர ஆசையை விருப்பத்தை நீங்க யோசிக் காமல் நீங்க முடிவெடுத்தால் இது ஞாயமா அம்மா"? என்று தன் ஆதங்கத்தை கொட்டித்தீர்த்தாள் அனிதா. "அனிதா என்ன பொண்ணும்மா நீ அப்பா இல்லாமல் உன்னையும் அண்ணனையும் வளர்த்து படிப்பித்து இந்த நிலைமைக்கு கொண்டுவர



நான் பட்ட கஷ்டம் யாருக்குத் தெரியும். ஒவ்வொரு வடுவீடாயசென்று பத்துப் பாத்திரம் தேய்க்காத குறை தான். மற்றப்படி கூலி வேலை செய்து உங்களை இந்த நிலைமைக்கு கொண்டு வந்திட்டன். நான் இருககேக்குள்ள உங்க இரண்டு பேருக்கும் கலியாணத்தை செய்து பார்த்திட்டனெண்டால் நிம்மதியாவும் இருக்கும். என்ர உயிர் சந்தோஷமாகவும் போகும். அத்தோட எனக்கும் பேரன் பேர்த்திகளை கொஞ்சவும் ஆசை தானம்மா." என்று தாய் மரியம்மாவும் கண்களிலே நீர்மல்க கூறிக் கொண்டிருந்தாள். "சரியம்மா உங்களுக்கு பிடிச்ச ஆனால் என் படிப்புக்கு தடையில்லாத ஒரு மாப்பிள்ளையென்றால் நான் கட்ட சம்மதிக் கிறன். மற்றப்படி அப்படி இப்படி யாரையாவது கொண்டு வந்து தலையில் கட்டிட வேண்டாம்." என கூறிவிட்டு அனிதா தோட்டத்திற்குச் செல்ல தாய் தரகரைப் பார்க்க கிளம்பினாள்.

தரகர் அம்மாவிடம் கொடுத்த படத்தை கைகளிலே வாங்கிய அனிதாவிற்கு நித்தீஷின் நினைவுவர படத்தில்கூட நித்தீஷே தெரிந்தானே தவிர அந்த மாப்பிள்ளையின் முகம் சற்றும் தெரியவில்லை. நித்திஷீக்கு சொன்ன முடிவுதான் மனத்திலேயும் எழுந்தது. "என்ன பிள்ள வைத்த கண் வாங்காமல் படத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறாய். ரொம்ப பிடித்து விட்டதோ? என கேட்ட அம்மாவிடம் "ஓம் அம்மா பிடிச்சிருக்குது" என்று ஒரே சொல்லில் கூறிவிட்டு மீண்டும் தோட்டத்திற்கே சென்றுவிட்டாள்.

வழமையாக அவர்கள் சந்திக்கும் அந்த ஆலமரத்தின் கீழ் காத்திருந்த அனிதா நித்தீஷிடம் தன் சோகக் கதையைக் கூறிக்கதறினாள். இன்றைக்கே தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறும் இல்லாவிடின் தான் தரகர் காட்டிய மாப்பிள்ளைக்கே தலையை நீட்ட வேண்டிவரும் எனக்கூறி நித்தீஷிடம் முடிவைக் கேட்டு நின்றாள். அதற்கு நித்தீஷ் "இங்க பாரு அனிதா நினைத்தவுடன் உன்னைக் கூட்டிக்கொண்டு போய் திருமணம் செய்யுமளவிற்கு என்னிடம் வேலையில்லை. இன்னும் உனக்கும் வேலை கிடைக்கவில்லை. இந்த நிலையிலை இருவரும் திருமணம் செய்து என்ன செய்யிறது அனிதா. எமக்கென்றொரு குடும்பம் குழந்தை என்று வரும்போது பொறுப்புக்களும், கடமைகளும் நிறைய வரும். இரண்டொரு வருடம் பொறுத்துக்கொள் அனிதா" என்று தன நிலைப் பாட்டை கூறி அவளை ஆதரவாக அணைத்துக்கொண்டான். அவனது அணைப்பை வேகமாக விடுவித்துக்கொண்ட அனிதா "காதலிக்கும் போது வேலை எல்லாம் ஒருபிரச்சனையாக தெரியாது. திருமணம் என்று வரும்போது மட்டும் ஏதாவது தடையாக வரும். இயலுமென்றால் அம்மா, அண்ணனிடம் வந்து திருமணத்தைத் தடுத்து நிறுத்தும் வழியைப் பாருங்கள். அதுவும் இல்லாவிட்டால் விடுங்கள். நான் அம்மா காட்டின வருக்கே தலையை நீட்டிவிட்டுப் போறன்." என்று ஆவேசமாகக் கூறிவிட்டு எழுந்து நடக்கலானாள்.

கஷ்ரப்பட்ட குடும்பத்தில் பிறந்த வளர்ந்த நித்தீஷ் குடும்பப் பொறுப்புக்களைத் தாங்கும் சுமைதாங்கியாக இருந்தான். பட்டதாரியாக இருந்தாலும் வேலையற்று அலைந்தான். இவையெல்லாம் அனிதாவிற்கு தெரிந்தும் தன்னிலையை நியாயப்படுத்த முனைந்தாலேயொழிய மற்றவன் பக்கம் நின்று யோசித்துப் பார்க்கவில்லை. இதுதான் உலகம்.

மறுநாள் காலை அனிதாவின் வீடுதேடிச்சென்ற நித்தீஷ் அனிதா வீட்டினரிடம் தன் காதலை கூறிய வேளை தகாதவார்த்தைகளால் அவனை திட்டித்தீர்த்த அனிதாவின் அம்மாவும் அண்ணனும் அனிதாவின் வாழ்க்கையில் குறுக்கிட்டால் விபரீதங்களைச் சந்திக்க நேரிடும என்று கூறி அவனை விரட்டி விட்டனர். கலங்கிய கண்களுடன் வீடுதிரும்பிய நித்தீஷ் தன்னம்பிக்கை உள்ளவனாய் தன் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வெளிநாட்டுப் பயணம் புறப்பட்டு விட்டான்.

காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அனிதா, தாய் பேசிய வரனுக்கு தன் கழுத்தை நீட்டி இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் அவர் தம் இல்லறப் பூங்காவில் மலர்ந்த ஓர் மொட்டுத் தான் ஆகாஷ். போரின் உக்கிரம் வன்னிப் பெருநிலப்பரப்பை ஆட்கொண்ட போது அது அனிதாவின் குடும்பத்தையும் விட்டுவைக்கவில்லை. இடப்பெயர்வின் போது இயமனாக வந்த எறிகணையில் கணவனைப பறிகொடுத்து குழந்தையுடன் இளமையில் விதைவைக் கோலம் பூண்டு அநாதரவாக முகாம் வாழ்க்கை வாழ்ந்து மீண்டும் தன் சொந்த ஊரில் அவள் குடியமர்கிறாள். இவளின கோலம் அவள் அம்மா அண்ணனுக்குக் கூட அவளைத் தம் பக்கம் சேர்த்துக்கொள்ள மனமிருக்கவில்லை. அண்ணனுக்கு வாய்க்கப்பெற்ற மனைவியோ வைராக்கிய உள்ளம் படைத்தவள். அவளின் கட்டுப்பாட்டில் அண்ணனும் அம்மாவும் இருந்ததால் அனிதா தன் பிள்ளையுடன் தனிமரமானாள். தனித்து ஒரு தொழில் கூட செய்ய முடியாத அளவிற்கு போரின் கொடூரம் அவளில் ஓர் வடுவினை ஏற்படுத்தியிருந்தது. அத்தகைய ஒரு அநாதையை யார் தான் அரவணைப்பார்?

ஒவ்வொரு மனிதர்களின் தோள்களிலும் பாவங்களும் சுமைகளும் தாமாக ஏற்றப்படுபவையல்ல. அவை வலுக்கட்டாயமாகவும் ஏற்றப்படுகின்றன. இதனைப் போக்க விண்ணுலகத் தேவன் பூமியில் மனிதனானார். வீட்டின் பொறுப்புக்களையும் கடமைகளையும் தனித்துநின்று சிலுவையாக தன் கரங்களில் அல்ல முதுகிலே சுமந்துகொண்டிருக்கும் அனிதாவின் வாழ்க்கைக்கு ஒளிகொடுக்க யார் தான் வருவார்கள்? இயேசுவின் பிறப்பு எல்லோரர் வாழ்விலும் ஒளிகொடுக்கும் என்று கூறப்பட்டு வந்ததை அனிதாவும் நன்கு அறிவாள். ஆனால் அவள் வாழ்க்கையில்......?

கிறிஸ்மஸ் பண்டிகையும் நெருங்கி விட்டது. "கிறிஸ்மஸிற்கு என்ன வேணும்" என தன் பிள்ளை ஆகாஷிடம் கேட்டபோது அவன் "எனக்கு அப்பா வேணும்" என சொல்லி அழுதான். அனிதாவும் பதிலுக்கு அழுதாள். வார்த்தைகள் அவள் தொண்டைக்குள்ளேயே அடைபட்டு தவித்தது. பிள்ளையின் மனதை தேற்றுவதா? அல்லது தன் மனதை ஆற்றுவதா? இருதலைக் கொள்ளி எறும்பாக அவள் தவித்தாள். எனினும் பிள்ளையைச் சமாதானப் படுத்துவதற்காக அந்த பிஞ்சு உள்ளம் பிய்ந்துவிடாமல் இருப்பதற்காக "கடவுள் கண்திறபபான்" என்ற ஒற்றை வார்த்தையை மட்டும் அவளால் கூறமுடியவில்லை; உச்சரிக்க முடிந்தது.

நத்தார் தினத்திற்கு முதல்நாள் தான் கூலிவேலை செய்து சேர்த்துவைத்திருந்த பணத்தில் தன் குழந்தைக்கு உடுப்பும் ஒரு சிறிய பிஸ்கற் பையும்- வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தாள் அனிதா. இதுதான் அனிதா குடும்பத்தின் கிறிஸ்மஸ் விழா. பெத்தலேகேம் மாட்டுக்குடில் போலவே அவர்கள் வீடும் இருந்ததால் அங்கே அலங்கார வேலை செய்ய அவசியமிருக்கவில்லை. கந்தல் ஆடைகளும் ஒரு மூலையில் இருந்தன. கிராம மக்கள் நத்தார் சாமப்பூசைக்கு புறப்பட தயாரானார்கள். தனது அம்மாவும் அண்ணன் குடும்பமும் நத்தார் பூசைக்கு ஊரவர்களோடு மிகவும் ஆடம்பரமாகச் சென்றுகொண்டிருப்பதை தெருவிளக்கின் ஒளியில் தெளிவாகக் கண்டாள் அனிதா. சிலர் வாழ சிலர் வீழ இந்த உலகில இறைவன் கொடுத்து வைத்திருக்கின்றான். பூசைக்குப் போவோமா? என்று குழந்தையிடம் கேட்டபோது கூட அவன் அப்பா வந்தால் தான் பூசைக்கு வருவேன் என கூறி பிடிவாதம் பிடித்துவிட்டான். மகனை சமாதானப்படுத்த முடியாது இறைவனில் எல்லாப் பழியையும் போட்டு விட்டு தெருவிலே பூசைக்கு போகிறவர்களைப் பாாத்த வண்ணம் கதவுநிலையோரமாக வாழ்க்கையில் நடந்துமுடிந்த நிகழ்வுகளை நினைத்தவண்ணம் இப்போது சாய்ந்திருந்தாள் அனிதா.

தேவன் கோவில் மணியோசை கேட்டது. அது நத்தார் பூசையின் ஆரம்ப ஓசை. காற்றில் கலந்த குருவானவரின் மொழிகளும் இறைமக்களின் ஆர்ப்பரிப்பும் அனிதாவின் உள்ளத்தை வருடிச் சென்றது. துன்பக்கனவுலோகத்தில் மிதந்து கொண்டிருந்தவள் ஒரு அரவம் கேட்டு திடீரென்று தன்னிலைக்கு வந்தாள். அவள்முன் வீட்டுவாசலில் ஒரு உருவம் நின்றது. அது ஒரு ஆணின் தோற்றம். கூர்ந்து பார்த்தாள் எதுவும் தெரியவில்லை. குப்பிவிளக்கை தூக்கி வந்தவன் முகத்திற்கு நேரே பிடித்துப் பாாத்தாள். அவன் வேறுயாருமல்ல! பழைய நித்தீஸ். "அனிதா இதுவரை காலமும் உன் நினைவுகளோடு உன் துன்ப துயரங்களை எல்லாம் அறிந்தவனாய் நான் வெளிநாட்டில் உழைத்தேன். இப்போ உன்னோடு சேர்ந்து உன் துன்ப துயரங்களில் பங்குகொண்டு உழைப்பதற்காக இங்கு வந்துள்ளேன். என்னை ஏற்பாயா?" என நித்தீஷின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு அனிதா இது கனவா? நனவா? என ஒருகணம் திகைத்தாள். கன்னிமரியாளுக்கு கபிரியேல் தேவதூதன் சொன்ன மங்களவார்த்தையாக நித்தீஷின் வார்த்தைகள் அவள் காதுகளில் ஒலித்தன. இரு உள்ளங்களும் சங்கமமானபோது வீட்டுக்குள் உறங்கிக்கொண்டிருந்த குழந்தை எழுந்து பார்த்தது.

செல்வி அனுஷியா யோகராஜா
முகாமைத்துவ உதவியாளர்
பிரதேசசபை - கிளிநொச்சி

"அப்பா வேணும் என்று கேட்டாய் இதோ அப்பா வந்து விட்டார்." என அனிதா விம்மலுடன் கூறிய வார்த்தைகள் அந்த இருளையும் ஒளி படச்செய்தது. நாங்கள் பூசைக்குப் போவோம் என அனிதாவின் வலக்கரத்தை நித்தீஸ் பற்றப்போனபோதுதான் அவளது வலக்கரம் துண்டிக்கப்பட்டிருப்பதைக் கண்டு உறைந்து போனான். "இதுவும் போர் குத்திய முத்திரை" என அனிதா சாவாதானமாகக் கூறினாள். அனிதாவின் இடக்கையைப் பற்றிக்கொண்டு குழந்தையை மார்போடு அணைத்தான் நித்தீஸ்.

ஊனமுற்று விதவைக் கோலம் பூண்ட எத்தனையோ அனித்தாக்கள் எம் மண்ணில் வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்வு கண்ணீரில் கரையப் போகிறதா? அல்லது இவர்களுக்கு வாழ்வு கொடுக்க நித்தீஸ் போன்றவர்கள் வருவார்களா?

வாழ்வின் சுமைகளை பாலன் இயேசுவின் பாதத்தில் இறக்கி வைத்து ஆசீபெற மூவரும் ஆலயம் நோக்கி பயணம் ஆனார்கள். அவ்வேளை கருமேகம் சூழ்ந்திருந்த வானில் கருமேகம் கலைய நிலவு மெல்ல தலைகாட்டத் தொடங்கியது. வானில் மட்டுமல்ல அவர்கள் வாழ்விலும் இனி நிலவு தான்.



# இயேசு காவியத்தில் இயேசுவின் பிறப்பு



அ.நிக்ஸன்
(பத்திரிகையாளர் - கொழும்பு)

"எங்குமே பரவி எங்கனும் விளங்கும் யேசுவின் வாழ்க்கையை தொகுத்து இவ்வண்ணம் தமிழில் தந்துவைத்தேன் யான்" என்று தனது இறுதிக் காவியமான இயேசு காவியத்தின் பாயிரத்தில் பகரும் கவிஞர் கண்ணதாசன் "எத்தனை உண்மை வந்து பிறந்தது யேசு பிறப்பிலே" என்று மங்களத்தில் உரைக்கின்றார்.

இறந்தும் வாழும் கவியரசரின் இறவாக் காவியத்தில் வரும் இயேசு பிறப்பு என்னும் முதல் பாகத்தினை மட்டும் இயேசுவின் பிறப்பினை நினைவு கூரும் இந்த வேளையில் எடுத்து நோக்குவோம்.

## பெற்றோர் சிறப்பு

மங்களத்தூது எனும் பகுதியில் கண்ணதாசன் தனது கைவந்த கலையான வர்ணிப்பு திறனுக்குள் மரியன்னையை உள்ளடக்குகின்றார். "நிலவெனும் வதனம் நெற்றி நெடுமழையனைய கூந்தல் மலரெனும் கண்கள் மரியன்னை அழகின் தெய்வம்" என்று மரியாளின் களங்கமற்ற குளிர்மையான ஒளிவீசும் முகத்தினையும் மென்மையான மேனியையும் சாந்தமான கண்களையும் கூறிமொத்தத்தில் அழகின் தெய்வம் என கூறுகின்றார்.

இதில் இருந்து மரியாள் அழகுக்குமாத்திரம் அல்ல- தெய்வமல்ல- தெய்வத்தை ஏற்று தாய்மையைப் போற்றும் தகுதியானவள் என்பதனை நாம் உணரக்கூடியதாக உள்ளது.

"தன்னிகர் இல்லாததான தாவீது வம்சம் சார்ந்தபொன்னிகர் சூசையப்பர்" எனும் அடிகள் மூலமாக மரியாளின் கணவன் யேசுவின் தந்தை சூசையப்பரின் தாவீதுகுலத் தனிப்பெருமையை எடுத்தியம்புகிறார் கண்ணதாசன். மாதாவை மாதருள் மணியாகவும் தந்தை சூசையை மாந்தருள் தனித்திறனாகவும் காண்பிப்பதன் மூலம் பிறக்கும் யேசுவின் பெருமைகளை எடுத்துரைப்பதைக் காணலாம்.

"யேசு என்கின்ற பேரைப் பாலூடன் ஊட்டிச் சூட்டிப் பாவிகள் பாவம் தீர்க்கச் சிலமிக்கோனாய் என்றும் வளர்த்து வாசிறக்கக் காண்பாய்" தேவதூதன் மரியாய்க்கு உரைக்கும் வார்த்தைகளில் தாய்மைப் பணியின் தூய்மையும் எடுத்துக் கூறப்படுவதுபோல் "பாலூட்டிச் சூட்டி" எனற வரிகாட்டி நிற்கின்றது. "தோண்டிய இடத்தில் தண்ணீர் சுரப்பதுபோலத் தன்னைத் தீண்டிய செய்திகேட்டு திருவுளம் மகிழ்ந்த பாவை" என்னும் உவமையணி இறைவனின் வார்த்தையை மரியாள் தடையின்றிஏற்றதைஎமக்கும் தடையின்றி காட்டப்பயின்ற சொற்தொடராகும்.

"ஆண்மகன் ஒன்று அவள் பெற்றெடுப்பாள் இனிய அம்மகனை யேசு என்றழைத்து தனிப்பெரும் வாழ்க்கை நடத்துவீர்" என்ற அடிகளில் இனிய உம்மகவு என்று சொல்லாமல் இனிய அம்மகவு என்று சொல்லுவதன் மூலம் பிறக்கும் பாலகனுக்கு தந்தையார் நீரல்ல அதை வளர்க்கும் பொறுப்பே உம்முடையது எனசொல்லாமல் சொல்லுவதன் ஊடாக கண்ணதாசனின் கவிவல்லமையை காணமுடிகின்றது.

## பாலன் பிறப்பு

உலகினை மீட்பதற்கு மெசியாவை அனுப்புவேன் என்று இறைவனின் வார்த்தை கேட்டு மக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அந்த மெசியாவின் வருகைக்காக காத்திருந்தனர். அவ்வாறு காத்திருந்த இதயங்களுக்கு கிடைத்த பெரும் புதையலே யேசு என்பதனை கண்ணதாசன் "ஆயிரம் காலம் தேடியலைந்து தோண்டியெடுத்ததோன்றாப் பொருள்" என்கிறார். மேலும் பாலனின் பிறப்பினை கூறவந்த கவிஞர் தன் உருவச் சிறப்பினுள் யேசுபாலனையும் உட்புகுத்திவிட்டார். "பொன்னொளி மாலை புகழுடன் பணிந்துமின்னலின்

> *அமைதியைக் காணாது அல்லலுறும் தமிழரின் பெரும் சுமைநீக்கித் தூங்கிடுவாய் தாலேலோ...*

பிழம்பாய் மேனிவடித்து தண்ணொளி பரப்பும் தகைசால் மைந்தனை கண்ணால் கண்டுகளித்தனர் ஆயரே" எனப்பாலனை புகழந்தது சாலவும் பொருத்தமே.

"மெல்லிய பட்டுப்போன்ற தூயவள் மரியாள் கையில் மெல்லிய பாலன் யேசுவிளக்கென புன்னகைத்தான்" என்று கூறும் கவிஞரின் பாடல்வரிகள் மரியாளின் தூய உருவத்தோடு மென்மைதாங்கிய கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தை காட்டுகின்றது. "விளக்கென புன்னகைத்தாள்" எனும்வரி யேசுபாலனின் முகத்தில் படர்கின்ற இடர்போக்கும் சுடர் போன்ற புன்னகையை கூறுவதோடு "யேசுவே உலகின் ஒளி" என்பதனையும் ஒழிவு மறைவின்றிக் காட்டுகின்றார் கண்ணதாசன்.

பூமியில் பிறந்த பிள்ளை தன் இரு கைகளையும் விரித்து மகிழ்ச்சி பொங்கவிளையாடுவது இயற்கையே. ஆனால் யேசுபாலன் விரித்த கையோடும் சிரித்த முகத்தோடும் வைக்கோலின் மீதுவிளையாடும் காட்சியினைக் கவிஞர் "இல்லை என்னாதவாறு இருகரம் விரித்து நின்றான்" உயர்வானதொரு கருத்தினை கொடுத்துள்ளார் கண்ணதாசன்.

வெற்றியின் சின்னமாகவிரிந்துநிற்கும் யேசுபாலனின் முகத்தின் முன்னே மாணிக்கத் தொட்டிலென்ன மாளிகைச் செல்வமே தோற்றுப் போகும் விண்ணரசின் மைந்தன் இறைவனின் மைந்தன் இறையரசின் செய்தியினைக் கூற வந்த யேசுபிரானின் மண்ணுல மகிமையைக் கவியரசர் "நாழிகை செல்லச் செல்ல நல்லொளி மேலும் பல்கும்" என்ப தன் மூலம் பிறப்பின்போதே பிற்காலச் சிறப்பை தெளிவாகக் காட்டுகின்றார்.

## தாலேலோ

ஏக்கத்தோடு தூங்குகின்ற மானிடர் வாழ்வில் கவ்விய இருளகற்றும் செவ்விய சுடரொளியாய் வந்த ஏந்தல் யேசுவினைத் தூங்க வைத்த எளிய மக்கள் பாணியிலே தாலாட்டுப் பாடுகின்றார். கவிஞர் கண்ணதாசன்."சோதிமணிப் பெட்டகமே சுடரொளியேதாலேலோ என்று தொடங்கி வானளந்த திருக்குமரா மனித குல மருத்துவனே" என்று தொடர்கின்றார். நோயுற்றவனுக்கு மருத்துவம் தேவை என்ற யேசுவின் பிற்காலக்குரல் கண்ணதாசனின் பிறப்பின் போதே தாலேலோப் பாடலில் தொனிக்கின்றது.

பூமியில் பிறந்த பின்னர் வரலாறுகள் படைக்கும் பெரியோர்கள் வரிசையிலன்றிப் பிறக்கும் முன்னமே வரலாறு கண்டவர் யேசு என்பதனை "அந்நாளில் நூலோலகர் ஆன்றோர்கள், பெரியோர்கள் சொன்னபடி மீட்பதற்கு தோன்றி வந்தாய் தாலேலோ" என்ற அடிகள் மூலம் தருகின்றார் கவிஞர்.

பாவத்தின் சேற்றினிலே சிக்கிச் சுழலும் மனித குலத்தின் ஆபத்தினை நீக்கிவிட தக்கதருணத்தில் வந்துதித்தவர் இறைமகனார் என்பதனை" மாரியிலே மழை பொழிந்து மக்களினம் வாழவைக்கும் காரியம் போல் உன் தந்தை காலத்தே அனுப்பி வைத்தார்." என்ற பாடல்வரிகள் ஊடாகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

நாடாளும் மன்னனின் மாணிக்கத் தொட்டிலுக்கு கிடைக்காத மாபெரும் வாய்ப்பொன்று இந்த மாடு வாழும் தொழுவதற்திற்கு கிடைத்து விட்டது. நாடாளும் மன்னன் கை அல்ல நாட்டில் வாழும் மக்களுக்காகவே வந்து பிறந்த எளிமைக் கவிஞர் "மாணிக்கத் தொட்டிலுக்கு வாய்க்காத பெருமையெல்லாம் ஆநிரைத் தொழிவினுக்கு ஆரளித்தார் எங்கோவே" என்று வினாவிலேயே விடையளிக்கின்றார்.

கைக்கோல் இன்றி வைக்கோல் மீதிலே வந்துதித்த இறையரசின் எளிமையைக் காட்டவந்த கவியரசர் "மாளிகையும் இல்லை மஞ்சமுமில்லை என்றாலும் ஏழைத் தொழுவில் வந்த இறைமகனே தாலேலோ என்று அமைதியாக இசைக்கின்றார்.

அடிமைப்பட்ட மானிடர் வாழ்வில் சுந்தரச் சுடரினை ஏற்றிவைத்து இறையரசின் மகிமையை எடுத்தியம்ப வந்த இரட்சகன் யேசுபாலகனுக்கு இந்நாளில் கவியரசர் பாணியிலே நாங்களும் பாடி நிற்போம்.

*அமைதியைக் காணாது அல்லலுறும்*
*மானிடனின் — பெரும்*
*சுமைநீக்கித் தூங்கிடுவாய்*
*சுந்தரனே தாலேலோ*

## உரோமை பேதுருவானவர் சதுக்கத்தில கிறிஸ்மஸ் மரம்



புனித பேதுரு வானவர் சதுக்கத்தில் மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கத்தை பாப்பரசர் 6ம் பவுல் முதலில் தொடக்கி வைத்தார். இம்மரமானது வருடாவருடம் வெவ்வேறு நாடுகளிலிருந்து பரிசாக உரோமைக்கு வழங்கப்படுகின்றது. இங்கே இம்மரத்தை அலங்கரிக்கின்ற பல வண்ண விளக்குகள் கிறிஸ்தவ விழுமியங்களை குறித்து நிற்கின்றது. இக்கிறிஸ்மஸ் மரமானது கிறிஸ்து கொணர்ந்த அமைதியின் சின்னமாக விளங்குகின்றது. இவ்வமைதியானது கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே ஏற்பட வேண்டியதொன்றாகும். இம்மரத்தை அலங்கரிக்கின்ற பலவண்ண விளக்குகள் கிறிஸ்து தனது பிறப்பின் மூலம் கொணர்ந்த ஒளியின் அடையாளமாக விளங்குகின்றது. மேலும் வான் நோக்கி உயர்ந்திருக்கும் இம்மரமானது இறை பிரசன்னத்தை எமக்கு நினைவூட்டுகின்றது.

## சிந்திக்க ஒரு சித்திரம்



# கிறிஸ்து பிறப்பு விழா போரின் போதும் அதன் பின்பும்

உலகத்திருச்சபையே உளமார மகிழ்வுடன் கொண்டாடிவரும் ஒரு மாபெரும் விழா கிறிஸ்து பிறப்பு விழா வாகும். இவ்விழா கிறிஸ்து மனித உருவெடுத்து மனித விடுதலைக்காக விண்ணகம் இருந்து மண்ணம் நோக்கி மனிதப் பிறப்பெடுத்ததை ஆண்டாண்டு தோறும் கொண்டாடி மகிழும் விழா. இவ்விழா பல்வேறுபட்ட காலப் பகுதியில் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பல்வேறுபட்ட மனித போராட்டங்களில் பலருக்கு பல்வேறு விதமான அனுபவத்தையும் அனுக்கிரகத்தையும் வழங்கிக் கொண்டிருக்கின்றது ஆகவே போரின் போதும் போரின் பின்பும் இவ்விழா கொடுக்கின்ற அர்த்தத்தையும், அர்த்தமற்ற விதமான நோக்கோடு சில நகர்த்தல்களையும் கண்டு மனம் பேதலித்தாலும் அதை கிறிஸ்துவின் பிறப்பு தினங்களிலே சொல்லிவிட வேண்டாமென்ற நோக்கோட ஒப்பீடு செய்கின்றேன்.



எம் மூதாதேயரின் விசுவாசத்தில் இருந்து வளர்ந்த நாம் கிறிஸ்து பிறப்பை நம் ஒவ்வொருவருடைய விடுதலையாகவும் விமோசனத்தின் அடித்தளமாகவும் கொண்டு பாவத்தில் இருந்து புண்ணியத்திற்கும், இருளில் இருந்து ஒளிக்கும் அடிமையில் இருந்து உரிமை வாழ்வுக்கும் அழைத்து செல்லும் ஒரு விழாவாக கொண்டாடி கிறிஸ்து காட்டிய அன்பிலும் பணிவிலும் தாழ்ச்சியிலும் பக்குவத்திலும் பரிசுத்தத்திலும் புனிதத்திலும் வேரூன்றி வாழ நாம் ஆசீக்கப்படுகின்றோம். ஆனால் சத்தங்களோடும் சாவுகளோடும் அவலங்க ளோடும் அநியாயங்களோடும் இழப்புக்களோடும் இழவுகளோடும் அதி துன்பத்தின் மத்தியில் முப்பது வருட கால கொடூர யுத்தத்தில் கிறிஸ்து பிறப்புக்கு நாம் கொடுத்த முதன்மை முக்கியத்தும் வாய்த்ததாக எனக்குத் தோன்றுகின்றது. வறுமையிலும் தவறுமையிலும் கிறிஸ்து பிறப்பில் நிறைவு கண்டோம். இழப்பிலும் இறப்பிலும் கிறிஸ்துவின் பிறப்பு எம் ஒவ்வொருவருக்கும் மறு பிறப்பாகவிருந்தது. அதுமட்டுமன்றி தமிழினத்தின் கலாச்சாரங்களையும் நடைமுறை வழக்கங்களையும் கொண்டு

அருட்சகோ. யோ. நிரோஜன் லெம்பட் அ.ம.தி

பாட்டன், பூட்டி, தந்தை, தாய், அண்ணன், அக்கா கால்களில் விழுந்து கிறிஸ்துவின் ஆசி வேண்டினோம். வீடு வீடாய் சென்று உணவு பண்டங்கள் பரிமாறிக் கொண்டோம். துயரிலும் மகிழ்வூட்டினோம் கிறிஸ்து பிறப்புக்கு ஏதோ ஒருவிதத்தில் அர்த்தம் கொடுத்தோம்.

அவைகள் இன்று தடம்புரண்டு போரின் பின்போகும் போக்கை பார்த்தால் அர்த்தத்தில் நெகிழ்ச்சி தன்மை நிறைந்ததாக தோற்றமளிக்கின்றது. அன்று சத்தங்களோடும் யுத்தம் இன்று சத்தமில்லா யுத்தம், சங்கடத்தில் சமூகம், அபார வளர்ச்சியில் விஞ்ஞானம் அனாவசியமான போக்கில் மனிதம் அர்த்தமற்ற விழாக்கள் வழ்ந்து மறைந்து போகும் கலாச்சாரங்கள் கிறிஸ்து பிறப்பு என்பது ஆடலும் பாடலும் வான வேடிக்கைகளுமல்ல மாறாக எம் ஒவ்வொருவருடைய உளமகிழ்வு, தனி மனித விடுதலை இவைகளை இப்பேற்பட்ட சமூகங்களில் காணவில்லையே என்பதை நினைக்க நினைவுகளை பல பல சொல்லுகின்றது அன்று நம் எண்ணங்கள் இன்றில்லை அன்று நாம் செய்தவைகள் இன்றில்லை ஏன் இன்று உலக ஆடம்பரங்கள் மலிந்து கிறிஸ்மஸ் விழா என்றால் ஆலயங்கள் எல்லாம் ஆடையகங்களாகவும் விநோத ஆபரண அழகு நிலையங்களாகவும் ஆள்பாதி ஆடை பாதியாக தோற்றமளிக்கும் அன்னிய கலாச்சாரங்களாலும் நிறைந்து நிற்கின்றன.

இவைகள் மாறவேண்டும் உண்மையான கிறிஸ்மஸ் எதுவென நாம் கண்டு கொள்ளவேண்டும். ஆகவே நம் தூய கலாச்சாரம் முறைமைகளைத் தாங்கிய ஒரு கிறிஸ்து பிறப்பை நாம் கொண்டாட வேண்டுமென்பதை நம் இளையோர்களும் முதியோர்களும் உய்த்துணர வேண்டும். ஏனெனில் இங்குதான் உண்மையான ஒப்புரவுக் கிறிஸ்மஸ் உண்டு, உண்மையான கிறிஸ்துவின் விடுதலை உண்டு. ஆகவே இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியை கண்டது போல் நாமும் நடக்கின்ற இருளில் இருந்து ஒளியை நோக்கி நகர்வோம். அப்போது மனிதம் மனிதத்தை பேணும், உரசல்கள் இல்லா தூய உறவு நிலை வளரும். உல்லாசமில்லா உன்னத கிறிஸ்து பிறப்பு விழாவின் அர்த்தம் அன்றுபோல் இன்றும் இனிக்கும். முயற்சிப்போம். முழு மனித விடுதலையை கொணர்ந்த கிறிஸ்து பிறப்பில் மகிழ்ந்திருப்போம்.

---

# பழமையிலிருந்து புதுமைக்கு..

அருட்சகோதரர். பி. டினேஷன்

இயேசு இவ்வுலகிற்கு மனிதனாக அவதரித்ததை கிறிஸ்மஸ் விழாவாக நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம். ஒருவருடைய பிறப்பு பல விடயங்களையும் செய்திகளையும் சுமந்து வரத்தவறுவதில்லை அந்த வகையில் இயேசுவின் பிறப்பும் இதற்கு விதிவிலக்கானது அல்ல. இயேசுவினுடைய பிறப்பு எல்லோருக்கும் மகிழ்வையும் அமைதியையும் கொண்டு வந்தது. "இதோ எல்லா மக்களினத்தாருக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்" *(லூக்4:18-19)*. ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். *(லூக்4:18-19)*. இயேசுவினுடைய மனித அவதாரம் இவ்வுலகிற்கு முழு மனித விடுதலையையும் கொண்டு வந்தது என்றால் அது மறுக்கப்பட முடியாத உண்மை.

இவ்வாறு பல ஒளியின் விழுமியங்களை இவ்வுலகிற்குக் கொண்டு வந்த இறைமகனை நாம் உள்ளம் எனும் கோயிலில் பிறக்க இடம் கொடுப்பதில்லை காரணம் எங்களிடையே இருக்கின்ற பொறாமை, பகைமை, பழிவாங்கும் எண்ணங்கள், நான் என்ற அகங்காரம், மற்றவனைப் படு குழி தோண்டிப் புதைக்கும் சிந்தனைகள், இரத்தத்திற்கு இரத்தம், அடக்கி ஆளும் விருப்புக்கள், களியாட்ட வாழ்க்கை, பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் வன்முறைச் சுரண்டல் போன்ற சிந்தனையில்லா தெளிவில்லா வாழ்க்கை வட்டமே. பிறக்கின்ற பாலகனை குடிலிலே பிறக்க விட்டு சேற்றினைப் பூசியவர்களாக வெளிவேடம் தரித்து எமது வாழ்க்கையினை நகர்த்துகின்றோம். எங்களுடைய ஆடைகளும் அணிகலன்களும் புதியவைகளாக இருந்தாலும் உள்ளம் என்றும் பழைமையை நோக்கியே அலைகின்றது. "புதுமை" எனும் ஆடை அணிந்து புதுப்பொலிவுடன் எம் உள்ளத்தில் இறைமகன் பிறக்க இடமளிப்போம் பகைமைகளையும் பகிடிவதைகளையும் சுயநல விருப்புக்களையும் சுட்டெரிப்போம். மனிதனை மனிதனாக மதித்து மனித மாண்பை பேணுவோம். போரின் வடுக்களை சுமந்ததால் ஏழைகளாக, கைம்பெண்களாக, அநாதைகளாக, ஊனமுற்றவர்களாக, துணையின்றி கவலையோடும் துன்பங்களோடும் வாழும் எமது உறவுகளுக்கு அன்புக் கரம் கொடுப்போம்.

மாற்றங்கள் நிகழும் இவ்வுலகில் மாறாத்தன்மையுடன் வாழும் இறைமகனை அன்போடும் அமைதியோடும் பிறக்கும் நிலை மிகத் தொலைவில் இல்லை.

"ஆயிரம் இரவுகள் கோர்த்து வைத்த
நினைவுகளை மூட்டை கட்டி
இரசித்து இரசித்து வைத்திருக்கின்றேன்
மகிழ்வுடன் இயேசு எம் உள்ளத்தில்
பிறக்கும் அந்த நாளிற்காக........"

---

# உங்கள் மனங்கள் பெத்லகேமாகட்டும்

முப்பதுஆண்டுகள் உரிமை வாழ்வுப்போர் முடக்கப்பட்ட நிலையில் நம்முடைய முடக்குவாதத்திற்கு மருந்து செய்ய அல்லல்படுகிறோம். இனவெறியை இடையில் கட்டி, மமதையை மனதில் மாட்டிநாம் தொடுத்த யுத்தவில் இன்று உரிமைகளைப் பெற்றுத் தராதுமுறிந்துவிட்டது. கன்னிக்காரிகைகளை கைக்குண்டுகளுக்கு நாம் காவு கொடுத்தோம். அறிவில் பலரையும் பல்குழலிற்குப் பலி கொடுத்தோம். இன்றுகண்களைக் குருடாக்கியகிறிஸ்தவர்களாய் கிறிஸ்து பிறப்பை கோலாகலமாக கொண்டாட ஆயத்தமாகின்றோம். நம் சோதரங்கள் சோகத்தில் ஆழ்ந்திருக்கையில் நாம் சோபனமாய் கொண்டாடும் கிறிஸ்து பிறப்புவெறும் அர்த்தமிழந்த அகராதியாகவே காணப்படும் என்பதில் ஐயமில்லை.

எனவே என்ன செய்வது? கிறிஸ்துவை சவக்குழிகளில் புதைத்து விட்டு நாம் எப்படிகிறிஸ்து பிறப்பை கொண்டாட முடியும். எனவே நம்முடைய மனங்களின் வெற்றுப் பிரதேசங்களை "கிறிஸ்து" எனும் நாமத்தால் அலங்கரிப்போம். நமது சமூகத்தில் கொலையுண்டுபோன கிறிஸ்து பிரானின் வார்த்தைகளுக்கு வாழ்வாதார சுவாசத்தை கொடுப்போம். கிறிஸ்துவின் பொன் மொழிகள் நமது பிரதேசங்களில் வாழப்படும் போது நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்கள் அர்த்தம் பெறும். காசேதான் கடவுளெனும் குருட்டு மொழி பேசும் கும்பகர்ணர்கள் மத்தியில் கரைகாட்டும் கலங்கரையாய் கிறிஸ்து எனும் தீபத்தை ஏற்றிவைப்போம். அமைதியின் வெண்புறாவை நம் அகங்களில் பிரசவித்து அன்பெனும் ஆணியால் நமது வாழ்க்கையைநாம் அலங்கரிக்கும் போது நமது வீடுகள் பெத்லகேம் மாட்டுத் தொழுவமாய் மாறுவதை நாம் உணரலாம். அன்று நமது வீடுகளின் மூலைகளில் வானதூதரின் வாழ்த்துப்பா கேட்கும் அன்றொரு நாள் இடையர்களுக்கு இயம்பப்பெற்ற அதே நற்செய்தி – "உங்டகளுக்காக மீட்பர் தாவீதின் ஊரரில் பிறந்துள்ளார்" *(லூக்கா 2:11)* நம்முடைய காதுகளில் ஒலிக்கும் எனவே கிறிஸ்துவை விலங்கிட்டுவிட்டு நாம் கொண்டாடும் வரன்முறையற்ற கொண்டாட்டங்கள் இனிமேல் களையப்படட்டும். இவ்வாண்டு கிறிஸ்துபிறப்பு நம் அனைவருக்கும் சகாராவில் தூறும் சாரல் மழையாக, புதுமையூட்டும் அமைதியை அருளும் விழாவாக அமைய வேண்டுவோமாக.



— அருட்சகோதரன்
வே. ரஞ்சன் சேவியர்

# நம்பிக்கையின் ஒளியே – நீ வேண்டும்

மனுக்குலத்தின் மீட்புக்காய்
மண்ணுலகில் அவதரித்த பாலனே – எம்
தேசத்தைப் பாராயோ!
மானுடர்க்கு விடுதலை தாராயோ!

கால்நூற்றாண்டு நடந்தேறிய சமர்
கற்பனைக் காவியமல்ல
கண்ணீர் மல்க நாம் பட்ட காயங்கள்
உரிமைக்கான உயிர்த்தியாகங்கள்

உறங்கிப் போனோம் ஊமைகளாய்
ஊனமுற்றோம் குண்டுமழையால் - இப்போ
எடுப்பார் கைப்பிள்ளை எம் வாழ்வு
உண்மையை யார் அறிவார்

காரிருளில் நடக்கிறோம்
சாவின் நிழலில் தவிக்கின்றோம்
ஒளியாய்ப் பிரகாசிக்க
நம்பிக்கையின் ஒளியே நீ வேண்டும்.

அருட்சகோதரர். கெ. இரோனியுஸ்

# நீதியின் சுடராய்...

*அழகுருவாய்த் தரணி வந்த*
*தூய வெண்ணிலவே! – உலகின்*
*பாவங்கள் போக்க வந்த*
*இறையின் கண்மணியே!*
*பாலைவனமாகிவிட்ட நம் வாழ்வில்*
*நீரோடையாய்ப் பாய்ந்து வாரும்*
*பட்ட மரமாகிவிட்ட இதயங்களில்*
*நம்பிக்கைத் தளிராய் வாரும்*
*உலகாளும் தெய்வமாய் - மனு*
*உருவெடுத்த தேவனே!*
*வாசம் தொலைத்த பூக்களாய்*
*வசந்தமிழந்த நம் வாழ்வில் - சுதந்திர*
*சுவாசக் காற்றாய் வாரும்*
*புனிதம் புகுந்த - மனிதனாய்*
*பூமி வந்த மன்னவனே!*
*அடக்குமுறை அராஜகம் ஒழித்து - இந்த*
*உண்மையில்லா உலகில்*
*உணர்வில்லா மாந்தரில் - நீர்*
*உதித்து வருவீர்*
*நீதியின் சுடராய்...*

அருட் சகோதரர்.
A. துஷியந்தன்

# வா பாலகனே!

பாவத்தை பலாத்காரம் பண்ண
பாருக்கு வந்த பாலகனே
உன் விதைப்பின் விருட்சங்களை
விரைந்து வந்து பார்
தீர்ப்பிடுதலுக்கு தீர்க்கமான
தீர்ப்புச் சொன்னாய் நீ
இன்று தீர்ப்பிடாமலேயே தூக்கு
மேடையேறும்
தண்டனை விமோசனம் பார்
தாய் தந்தையை மதிக்க
மாண்புமிகு மதி சொன்னாய் நீ
இன்று மதிப்பிற்காய் மிதிக்கப்படும்
அன்னையரின் அவலம் பார்
மண உறவிற்கு
"திரு" என மதிப்பளித்தாய் நீ
இன்று காமுகர்களால் கற்பழிக்கப்பட்ட
கன்னியரின் கருமாதிகள் பார்
வா பாலகனே
உன் போதனைகளுக்கு போசனம் போடு
வலுவிழந்த உன் வாய் மொழிகளை
வைரமாக்கி வாழ்வு கொடு

அருட்சகோதரர்.
வே. றஞ்சன் சேவியர்

# மீண்டும் ஓர் பிறப்பு...

*வார்த்தையான இறைவா!*
*வாழ்வியலை இழந்து*
*வாழ்க்கையை வெறுத்து*
*வானம் போல் முடிவு இல்லாமல்*
*வாழும் எம்*
*வாழ்வாக வருவாயா?*

*அடிமைகளாய் வாழும் எமக்கு*
*அன்பினைக் காட்ட*
*பரதேசியாய் அலையும் எமக்கு*
*பரிவுகாட்ட*
*வாழ்விலே இழந்தஉறவை*
*மீண்டும் பெறவருவாயா*
*அருள் தருவாயா?*

*அபிவிருத்தி எனும் போர்வையில்*
*அரங்கேறும் அநியாயங்கள்*
*கலாச்சாரம் எனும் பேரில்*
*சீரழிந்துவரும் குடும்பங்கள்*
*அரசியல் எனும் படுகுழியில்*
*அரிதாகும் தமிழினம்*
*ஒற்றுமை எனும் பார்வையில்*
*ஒன்றாகாததிருச்சபை*
*இந்நிலைமாறி*
*உன் அன்பைசுவைக்க*
*பிறப்பாயாஎம்...*



அருட் சகோதரர்.
சூ. அஜித் சுலக்ஸன்

# நித்திய வாழ்வின் நித்திய ஒளி

ஆதியும் அந்தமுமாய் பாலனே
அன்பின் ஒளியாய் மண்ணில் வருவாயே
வீதிகள்தோறும் விபத்தின் கொடூரம்
வீழும் உயிர்கள் நாளும் குரூரம்

சாதியும் சண்டையும் மறையவில்லை
சாக்கடைக் குணங்கள் குறையவில்லை
ஏதிலிகளாகி ஏங்கி வாழ்கின்றனர் எங்கும்
என்றுமே சின்னப்பாலா எம்மோடு தங்கும்


மோதி வெடித்திடும் சண்டைகள் நீங்கிட
மனித மாண்புகள் பாரில் ஏங்கிட
பீதியில் வாழும் மக்கள் இதயங்களில்
பரம் பொருளே சின்னப் பாலனே வரவேண்டும்

எக்காள தொனி எங்கும் அதிர்ந்திட
எண்திசையும் பூக்கள் உம்பாதம் உதிர்ந்திட

அக்களிப்பில் விண்ணும் மண்ணும் பணிந்திட
அகால மரணங்கள் அகிலத்தில் ஒழிந்திட

உக்கிய சிந்தனைகள் உருமாறி ஒற்றுமைகான
உலகம் மனித மாண்பினை தினமும் பேண
தீங்குகள் எங்கும் சமாதானம் மலர்ந்திட
தீமைகள் ஒழிந்து உண்மை புலர்ந்திட

வேண்டுதல் செய்யும் கரங்களை ஏற்று
வீண் பயன் நீக்க வருவீர் பாலகனே
நீண்டிடும் வேதனை உலகில் மறைய
நித்திய வாழ்வின் சத்திய ஒளியே வருக



**அருட்சகோ. கி. ஜெனிஸ்ரன்**
**உயர் கருமடம்**



# பாலகா வருக வருக....

அன்றலருகின்ற மலர் கொண்டடி வணங்கினோம்
அதிபுனித பாலகா எம் உள்ளம் வருக வருக
அகத்தினில் ஒளி இன்றி தவிக்கின்றோம் – ஒளிவிளக்காய்
அன்பர்கள் எம் உள்ளம் தன்னில் பாலகா வருக வருக

ஆடையை தேடி அலை மோதுகின்றோம் – பாலகா
அன்பனாய் எம் உள்ளம் தன்னில் வருக வருக
அமைதிக்காய் அழைகின்றோம்
அமைதி அரசராய் பாலகா எம்மிடம் வருக வருக

அகதிகளாய் உரிமை இழந்து தவிக்கும் எமக்கு – பாலகா
அமைதிக்குரலாய் எம் தேசம் தன்னில் வருக வருக
அடக்கு முறைகளால் முடக்கப்பட்டுள்ளோம் – பாலகா
அவணி தனில் அவை விழவாய் வருக வருக

அநீதிகள் எம்மத்தியில் தலை விரித்தாடுகின்றது – பாலகா
அநீதியை விரட்டி ஓட்டிட எம் சமூகம் தன்னில் வருக வருக
அநீதியை இவை தன்னில் வாழ வைக்கும் மாந்தர்களை
அமைதிப் புயலாய் ஆக்கிட வருக வருக

அன்பர்கள், நண்பர்களை எலும்புக்கூடுகள் மத்தியில் தேடி அலைகின்றோம்
அரவணைத்து எம் கண்ணீர் துடைத்திட பாலகா வருக வருக
அன்பு பிள்ளைகளை தேடியலைகின்றோம் – பாலகா
அன்பு பிள்ளையாய் எம்மிடம் வருக வருக

அடிமைகளாய் திறந்தவெளி சிறைச்சாலையில் வாழ்கின்றோம் – பாலகா
அடிமை விலங்குடைத்திட இம் மண்ணகம் வருக வருக
அகப்பட்டு அல்லலுறுபவர்களுக்கு – பாலகா
அடிவான விடிவெள்ளியாய் வருக வருக

அர்பண பூக்களை அணிமாலையாய் சூடுகின்றோம் – பாலகா
அகமகிழ்ந்து எம் உள்ளம் தன்னில் வருக வருக
அர்ச்சனை செலுத்துகின்றோம் – பாலகா
அடியவர் எங்களின் உரிமைகளை பெற்றுத்தந்திட – வருக வருக
அடிமேல் விழிவைத்து அடியவர் நாம் காத்திருக்கின்றோம் – பாலகா

அருட்சகோதரர்
V. அனாசியஸ் (அ.ம.தி)

# அருளூற்றி ஆதரிக்கும் அற்புதப் பேரொளி!

அருளூற்றி ஆதரிக்கும் அற்புதப் பேரொளி !
இருளகற்றி இரட்சிக்கும் இவ்வுலகில் பிறந்தார்

அபயம் அளிக்கும் உதய வேந்தே!
இதயத் துதிகள் என்றும் உமக்கே

மனித வாழ்வை மாண்பில் உயர்த்தும்
புனித மகனே! புதுவழி நீரே

சமுதாயச் சீரழிவு சங்கையுடன் உருமாற
அமுதான நற்செய்தி அக்கினியை ஆதரிக்கும்

அற்புத வேந்தரின் அதயப் பிறப்பு
நற்செய்தி உலகில் நல்லாசி பொழியும்

புத்தொளி பரப்பிப் பூமியில் பூத்த
தத்தரின் தரிசனம் துதிதரும் என்றும்

சிந்தை குழம்பிய சிறுவரின் உண்மை
எந்தை ஏந்தலர் ஏந்துவார் என்றும்

அங்கம் இழந்து அவலம் சுமந்து
பங்கப் படுவோரைப் பாலகன் தொடுவர்

சாதனை புரியும் சரித்திர நாயகர்
வேதனைச் சிறையில் விடுதலை வீசினார்

பறிபோன வாழ்வை கையேற்றி நின்று
குறிகாட்டி நிற்கிறதா குழந்தையே! பாலகா!

ஒற்றுமை நிலைக்கும் வேற்றுமை விலகும்
நிர்க்கதி நீக்குவர் நிம்மதி மன்னர்!

கதறிப் பதறிச் சிதறிய மக்களை
உதறித் தள்ளார் உன்னத மன்னர்

ஞா. அரியமலர்
மிருசுவில்

# பாலகா....

பாலகா !
பாதிவழியில் முடிந்து போன பயணம்
இங்கே நடுத்தெருவில் கிடக்கிறது
ஒரு சிலுவை
இதை சுமந்தவர்களில் பலர் சமாதியில்
சிலர் அடைபட்டுக் கிடக்கிறார்கள்
சிறைக் கூண்டில்
பலரின் முகவரி இல்லை
அவர்கள் காணாமல் போன பட்டியலில்
சிலர் சேர்ந்து விட்டார்கள்
யூதாசின் பரம்பரையில்
பலர் வாழத் தொடங்கிவிட்டார்கள்
எல்லாவற்றையும் மறந்து
பாலகா பாதிவழியில்
முடிந்து போனது பயணம்
இங்கே நடுத்தெருவில் கிடக்கிறது
ஒரு சிலுவை

- உயிரோவியன் -

# அவலத்தில் ஆயன் எழுகை



ஆண்டுதோறும் நம்மத்தியில் எழுகின்றாயே
ஆயன் உன்வருகை ஒளிகொடாதோ
ஆன்மாவே நம்வாழ்வென்று உணர்த்தி
ஆதரவாகின்றாயே நம்கதிக்கு - ஆனாலும்
இழந்திட்டோம் நிம்மதியை

அடிமைகளாய் ஆதரவின்றி வாழ்கின்றோமே
அதிகாரத்தால் ஆதாரமேயிழந்து போகின்றோமே
இனமென்ற போர்வையிலே நொறுங்குகின்றோமே
இறப்பினும் வாழ்கின்றோமே உன் அருளால் - ஆனாலும்
அடங்கிப்போகின்றோமே அவலத்தில்

பாதகர்களின் பட்ஜெட்டில் பதைபதைக்கின்றோம்
பாதியில் பாதை தெரியாது பரிதவிக்கின்றோம்
பட்டாசுகளாய் வெடிக்கின்றது எம்வாழ்வு
பாவ உலகில் கிடந்து - இன்னும்
பாவியெம் வாழ்வு தொடர்கின்றது சோகக்கதையாய்

நாடிழந்து நகரிழந்து அலைகின்றோமே
நாவுகளால் நச்சரிக்கப்பட்டு நசுக்கப்படுகின்றோமே
நடைபிணங்களாக பேச்சிழந்து போகின்றோமே
நம்தலைவர்களின் கொடூர சிந்தனையிலே - ஏனோ
நரகமே நம்வாழ்வென்றாகிவிட்டதே

மார்கழியில் மாமரிமடி தவழ்ந்ததேனோ
மாபாவி எமை மீட்கத்தானே
மதங்கொண்ட வாழ்வியலை முறியடிக்க
மாபரனாய் எழுந்து வாராய்
மழலையாய் வாராயோ எம்மனங்களிலே

திராட்சையூர்க்கவி
L. கெமில்ரன்

# மறுக்காமல் மறக்காமல் உதித்து விடு...

ஓ..... பாலகா உதிக்கின்றாயா எம் உள்ளங்களில்
வா வா விரைவாக வா வா
உன் வரவுக்காய் ஏங்கித்தவிக்கின்றோம்
விம்மி சிவந்த விழிகளுடன்
நொந்து நொந்து உடைந்த மனங்களுடன்
"யார் இருக்கிறார் நமக்கு" என்று
குமுறும் எம் இதயங்களோடு.......
இல்லங்களிலும் இடமில்லை பிறர் இதயங்களிலும் கூடவே
ஓரமாய் ஒடுங்கி அடங்கி இருக்கின்றோம்
இல்லங்கள் இருளாகி விட்டன – நல்ல வேளை
உள்ளங்களும் கருகுமுன்....
நீ வரும் செய்தி அறிந்து விட்டோம்
ஒளிரத் தொடங்குதே எம் மனம்
மறுக்காமல் மறக்காமல் உதித்து விடு எம் மத்தியில்

ஓ! நீ வரும் செய்தி கேட்டு ஒரு புறம் மகிழ்ச்சி, மறுபுறம் துக்கம்
ஏன் என்று கேட்கிறாயா......
சின்னப் பாலகனே பயந்து விடுவாயோ....
பாவம் நிறைந்த இவ்வுலகத்தைப் பார்த்து
வரும் வழியில் கவனமாகப் பார்த்து வா
கொலைகார, கொள்ளைக்கார கோஷ்டி நிற்கும்
வாள்களுடனும் துப்பாக்கிகளுடனும்
அன்னையையும் கூட்டி வா இல்லையேல்
கடத்தப்பட்டோர் பட்டியலில் உன் பெயரும் சேர்க்கப்படும்
வெள்ளை வான் நின்றால் விரைவாக விலகிச் செல்.....
விபச்சார விடுதிகள் இருக்கும் விழிப்பாக நடந்து வா...
வஞ்சகம், பொறாமை, ஆணவம், பழிவாங்குதல்
வரிசை வரிசையாகத் தலைவிரித்தாடும்
வரும் வழிகளிலே......... கண்ணே கவனமாகப் பார்த்து வா.

ஒழித்துக் கட்டி விடுவேன் இவைகளை
ஒளியை ஏற்றி விடுவேன் உலகெங்கும் - என்று
வீரமாய் விளையாடி நேரத்தைப் போக்காதே
எம்மை சந்தித்து விடு முதலில்.............
ஒன்றாக சங்கமித்த பின் - ஒய்யார நடை போட்டு
அழித்து விடலாமே இவைகளை – நாமும் சேர்ந்து.
என்ன நினைக்கின்றாய் கண்ணே!
மறுக்காமல் மறக்காமல் உதித்து விடு எம் மத்தியில்...!

எ. ஜெனித்தா
கிளிநொச்சி

# எங்கு பிறப்பாய் இறைவா???



எங்கு பிறப்பாய் இறைவா நீ சொல் ஐயா
அங்கு உனை வந்து நான் பார்க்க
எங்கேயும் இடமில்லை எல்லாமே நரகம்
எப்படித்தான் உன் தூய கால்கள் அதில் பதியும்

மாசற்ற குழந்தைகளை நீ தேடும் போது
தூசு படிந்த கசங்கிய மலர்களாய்
பேசும் சித்திரங்கள் பேதலித்து நிற்பதை
காணும் என் கண்கள் கண்ணீர் சிந்துமையா

பெண்ணுக்கு ஆணும் ஆணுக்குப் பெண்ணும் என்று
நீ வகுத்த நிலை மாறி ஒரு பால் திருமணங்கள்
சட்டத்தின் துணையோடு சாதிக்கும் காட்சிதனை
எப்படிச் சகிப்பாய்? எங்கே நீ பிறப்பாய்?
பெற்ற பிள்ளையைக் கொல்லுகின்ற தாய்மார்கள்
பாலூட்டும் அன்னையைக் கெடுக்கின்ற பாதகர்கள்
பணத்துக்காய் பாலரைக் கடத்துகின்ற கும்பல்கள்
இவையெல்லாம் இங்கிருக்கு எங்கு வந்து பிறப்பாய் நீ?

உன் கண்ணில் நீர் வழியக் காண்கின்றேன் என் இறைவா!
உன் சின்ன இதயம் கனப்பதைக் காண்கின்றேன்
என் கண்ணில் வழிகின்ற நீரையும் உன்னோடு
இணைக்கின்றேன் என் இறைவா! எங்கு நீ பிறப்பாய் சொல்?

- நவாலியூர் நாயகி -

# இன்றைய உலகு

விஞ்ஞான கண்டுபிடிப்பு
அமெரிக்காவில் குண்டுவெடிப்பு
ஒசாமாவின் கொலை
இந்தியப் பெண்களுக்கு அம்மன் கலை
இதுதான் இன்றைய செய்திகள்
உலகிற்கு அம்பு எய்திகள்

இரவில் போகும் கொள்ளை
விடிந்தால் வானம் வெள்ளை
நாட்டில் வில்லர் தொல்லை
தீமைக்கு இல்லை எல்லை

கல்லூரி மாணவர் படிப்பு
கொலிவூட்டில் இல்லா நடிப்பு
அழகிய பெண்களுக்கு எடுப்பு
காரணம் அவர்கள் இருப்பு

உறவுகளில் முறிவுகள்
அநீதியின் செறிவுகள்
அழிந்து போகும் உண்மை
அது நீர் மேலுள்ள குமிழின் தன்மை

விதவைகட்கு வேதனை
அவர்கள் எங்கு படைப்பது சாதனை
முன்னே படிக்காதவர் இங்கின்று
சந்தியில் குடிகாரர்

மாறும் தாரங்களும்
கணவனின் துரோகங்களும்
அருகிவரும் நீதிகளும்
பெருகிவரும் அநீதிகளும்
அழியும் காலமென்றால்
அது உடைந்துவரும் பாலம்
அழிக்கப்படும் கோலம்....

என். எப். யாழ்நிலா

# பிறக்கின்ற ஒளியில்......

வயது முதிர்ந்த மூதாட்டி
மனந்தனில் முணுங்குகின்றார்
பெற்றெடுத்த பிள்ளைகள்
கைவிட்டு சென்றதையெண்ணி
எதிர்காலத்தில் எம்மை
ஏந்தி நிற்பார்கள் என்று
ஏடெடுத்து படிக்கவைத்து
ஏணியிலேற்றி விட்டவள் – இன்று
ஏணியின் அடிதனில் நின்று
எதிர்பார்ப்பு மிகுதியாய்
ஏக்கத்துடன் காத்துநிற்கிறாள்
எத்தனை முதுமைகள்
இவ்வாறு ஏக்கங்களுடன்
எண்ணிப்பார் மானிடா
நீ செய்வது சரியாவென்று
பிறக்கின்ற ஒளியினால்
புதுப்படைப்பு பெற்றிடவே
மானிடா ஒருமுறை சிந்தித்திடுவாய

ம.அ. நிரோஷன்
மத்தியூஸ் வீதி

# மாந்தர்களின் மாவளனே...

மாண்புரு மன்னவனே......!!
மாமரி வயிற்றின் மணிமகுடமே.......!!
மனிதம் மதியா மாட்டுக் குடிலோ – உம்
மலர்ப்படுக்கை.......!!

விடியலின் தீபமே
வீசாத அமைதித் தென்றலின் ஓரங்களில் – எம்
விலை பேசப்படும் மனங்களில் வந்து பிறந்திடுவீரோ...!!

மரியின் மைந்தனே....!!
மங்கிப் போகும் பிச்சை பாத்திரங்களுக்கு
மனமுருகி..........!!
மன அமைதி அளிப்பீரோ...!! அவையும்

செல்லப் பாலகனே .........!!
சேய்மையில் நின்று எதிர்பார்ப்புக்களோடு ஏங்கி
நிற்கும்எங்களை
சற்று நீரும் பார்த்திடுவீரோ....!! – எம்மை
சாகடிக்கத் துடிக்கும் நாகரீக தேவதையிடமிருந்து
காத்திட வந்திடுவீரோ.....!!

ஜதீஷ் குமார் பிறெட்றிக் ஜோன்சன்
புனித வளனார் சிறிய குருமடம்



# கிறிஸ்துவின் பிறப்பு

என்ன கொடுமையென்று யாரிடம் சொல்ல
எழுதாத தீர்ப்புகளாய் தமிழர் வாழ்வின் திலை
துப்புக்கள் இழந்து தத்தளிக்கும்
படகுகளாய் மனங்களின் தவிப்புக்கள்

உண்ண அமர்ந்த போது மறுத்த உதடுகளோடும்
உறங்க நினைத்த போது மறுத்த கண்களோடும்
நித்தமும் உறவுகளை எண்ணி எண்ணி
நிலை குலைகிறது மனம்

புலரும் பொழுதுகளை மறந்து மறையும் பொழுதுகளோடும்
என்றும் நிம்மதியாய் ஆயிரம் நிமிடங்களை விட
பாலகா உன் மறு பிறப்பின் நிம்மதியான ஒரு நிமிடத்தை
தேடுகிறது மனம் அந்த ஒரு நிமிடமே எம் வாழ்வின் சூரியோதயம்



# புதியதொரு புத்தாண்டே வருக!

அ – அருள் தரும் இனியதொரு புத்தாண்டே அனைவரையும் மகிழ்விக்க வருவாயே!
ஆ – ஆற்றிடும் பணிகளின் உயர்ச்சியில் முதிர்ச்சி பெற
இ – இறை விசுவாச ஆண்டின் அர்த்தத்தை ஆழப்படுத்த
ஈ – ஈடில்லா அன்பு வாழ்வில் இறையரசை வளப்படுத்த
உ – உதவிடும் மக்களாக அயலவர்க்காய் எமை அர்ப்பணிக்க்
ஊ – ஊனியல்புக்கு அடிமையாகாது மனிதத்தை மதிக்க
எ – எந்நாளும் இறை வார்த்தை தியானித்து செபிக்க
ஏ – ஏற்றுள்ள திருமுழுக்கை இறுதி வரை உரிமையாக்க
ஐ – ஐயம் கொள்ளாத விசுவாச வாழ்வில் பிறர் குறையை மன்னிக்க
ஒ – ஒற்றுமைச் சமூகத்தை உருவாக்கி பகிர்ந்து வாழ
ஓ – ஓங்கிய பண்புகளால் எதிர்கொள்ளும் சவால்களை வெல்ல
ஔ– ஔடதமாய் நலமளிக்கும் நம்பிக்கையின் நற்கருணையை வாழ்வாக்க வருவாயே!

திருமதி. தவமணி
பேரின்ப நாதன்
உரும்பிராய்.

# இறைவன் நம்மோடு



மண்ணின் மகனே!
காரிருளிலும் சாவின்
இருள் சூழ்ந்த சூழமைவில்
வாழ்கின்ற – எமக்கு
உம் பிறப்பால் இனிய செய்தி
இறைவன் நம்மோடு!

அர்த்தப்படுகிறது உம் பிறப்பு – இன்று
உடமைகளையும் உரிமைகளையும் இழந்து
சொந்த மண்ணிலும் அகதிகளாய்
தறப்பாள் கொட்டில்களில்

சுயநல போக்குகளிலும்
சுரண்டல்களும் அநீதிகளும்
அரங்கேறும் எம் மண்ணில்
நீதியின் சுடராக நீர் இன்று

கன்னியின் மகனே!
கலாச்சார சீர்கேடுகளால் – எம்
கன்னியர் பலர் கர்ப்பவதிகளாக – இன்று
சிசுக் கொலையாலும் கருக்கலைப்பாலும்
சிதைக்கப்படுகின்றது மனிதத்துவம்

எமது இராக்கேலின் கண்களிலும்
கண்ணீர் தான் கடத்தப்பட்டு
காணமலாக்கப்பட்ட தம் குழந்தைகளை நினைத்து

எம் ஏரோதுகளின் ஆட்சியில்
பொய்யின் அழுகையும் இருளின் செயல்களையும்
சுயநலத்தின் நினைவுகளையும்
கண்டும் காணாமல் வாழ்கின்ற குரலற்ற மக்களாக..

மண்ணின் மகனே!
உம் பிறப்பு அர்த்தமாக்கப்படுகின்றது
எம் அழிவுகளில் எழந்திடும் வரம் தா
அநீதியை அடக்கிடும் அற்றலைத் தா...

நிசாந்தினி
உடுவில்



# வாழ்வு தருபவர் வாசல் வந்தார்

இருளின் ஆட்சி எதுவரைக்கும்? – இங்கு
கொடுங்கோல் அரசு எதுவரைக்கும்? தொடரும்
ஒடுக்குமுறைகள் எதுவரைக்கும்? எளியோர்
உரிமை மறுத்தல் எதுவரைக்கும்?

அழுத்தும் நுகங்கள் எதுவரைக்கும்? வகுத்த
அடிமை நிலைகள் எதுவரைக்கும்?
பாகுபாடு எதுவரைக்கும்?
பாவ வாழ்வு எதுவரைக்கும்

இருளின் பிடி எதுவரைக்கும்?
இழி நிலைகள் இங்கு எதுவரைக்கும்?
இனி முடிவு ஒன்று தெரியும்?
இறை வடிவில் மீட்புத் தெரியும்?

ஒளி ஒன்று பிறந்தது இருளகற்ற?
வழி இன்று பிறந்தது உயிர்கள் வாழ?

பாதகம் நிறைந்த தேசம்
பாவங்கள் மலிந்த தேசம்
பகைமைகள் மிகுந்த தேசம்
பரிசுத்தமாக்க பாலகனாய்
இன்று பிறந்தார் பரமனின் திருமகன்

சாவின் ஆட்சியில் சரித்திரம் முடிக்க
சாகா வாழ்வின் முகவரி காட்ட
வேகா உயிரின் விலையினைச் சொல்ல
விரைந்தது விண்ணக அரசு உனைத்தேடி

நீ அகதியா அவரும் அகதியானார்
நீ ஏழையா அவரும் ஏழையானார்
நீ வீடற்றவரா அவரும் வீடற்றவரானார்
ஆயினும் நிலையான வாழ்வு அவர் தருவார்
நிறைவான மகிழ்ச்சி அவர்தருவார்

அ. அற்பணன்
மெலிஞ்சிமுனை.

# கிறிஸ்து பிறப்பாரா?

வேர்களுக்கு கொதிநீர்
கிளைகளுக்கு வர்ணப்பூச்சு
பூக்கள் கசக்கப்படுகிறது
நார்களுக்கு தங்கப்பூச்சு
மண்ணுக்கடியில் மனிதப் புதைகுழி
மன்னர் நாவில் அகிம்சை வாதம்
ஜனங்கள் கொலை காணாமல் போதல்
மனித உரிமைகள் கணணி அச்சில்
பெட்டி தொலைக்கப்படுகிறது
சாவி பாதுகாக்கப்படுகிறது
தெருவீதியில் பள்ளங்கள் இல்லை
மனவீதிகள் எங்கும் குன்றும் குழியும்
புத்தனை மறந்து
போதி மரத்திற்கு ஆராதனை
உள்ளங்களில் கள்ளம்
கரங்களில் கற்பூரம்
கிறிஸ்துவை புறந்தள்ளி
கிறிஸ்மஸ் கொண்டாட்டம்
மாட்டுக்குடில் மாளிகையானதால்
மரணித்துப் போனது மானிட நேயம்
மண்ணுலகில் தேவன் இறங்கி வராது
விண்ணுலகில் இருப்பது சாலவும்நன்று
ஏனெனில்
சவப்பெட்டிக்கடைகளிலும்
சாமிப்படங்கள் தான்தொங்குகின்றன.

- C.P. கபில்ராஜ் -
மத்தியூஸ் வீதி யாழ்



# கனவுகள் நனவாக பாலன் இயேசு பிறந்திட வேண்டும்



நம் துயர் நீங்கிட வேண்டும்
நன்மைகள் சூழ்ந்திட வேண்டும்
இயேசு பாலன் பிறந்திட வேண்டும்
இந்த வையகம் தழைத்திட வேண்டும்

புதுயுகம் படைத்திட வேண்டும்
புதுமைகள் நிகழ்ந்திட வேண்டும்
மண்ணில் மனிதர் மகிழ்ந்திட வேண்டும்
மகிமைகள் நடந்திட வேண்டும்

அறியாமை நீங்கிட வேண்டும்
புது அறிவியல் வளர்ந்திட வேண்டும்
பண்டைய வாழ்வினைப் போற்றி
பாக்கள் இயற்றிட வேண்டும்

மனிதர் நிலைதவறி நடவாமை வேண்டும்
நினைப்பது நல்லது வேண்டும்
இயேசு பாலன் பிறந்திட வேண்டும்
கனவுகள் நனவாக வேண்டும்

கோ. யனப்பிரியன்
யா/சில்லாலை றோ. க. த. க. பாடசாலை
பண்டத்தரிப்பு.

# நாவாந்துறை - புதுக்குடியிருப்பு பங்குகளிற்கிடையே உறவுப் பாலம்

நாவாந்துறையில் இயங்கி வரும் புனித நீக்கிலார் பந்தி புனித மரியாள் பந்தி வின்செண்டிப் போல் சபையினர் பங்குத்தந்தை அருட்பணி பா.பி. இராச சிங்கம் தலைமையில் புதுக் குடியிருப்பில் மீள்குடி யமர்த்தப்பட்ட மக்களை 25.11.2012 அன்று சந்தித் தோம் அன்றைய நாள் எமது மறைமாவட்டத்தில் பொது நிலையினர் தின மாகும். இந் நன்னாளில் நாம் புதுக்குடியிருப்பில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களைச் சந்தித்ததனூ டாக நாம் பெற்ற அனுப வத்தை பாதுகாவலன் வாசகரகளோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின் றேன். பொது நிலையின ராகிய நாம் மேற்கொண்ட உறவுப் பால நிகழ்வு எம் வாழ்வையும் பணியையும் எமக்குச் சுட்டிக்காட்டுகின் றது. இவ்வாறான சந்திப் புக்கள் ஊடாக இயேசு எவ்வாறு தம் வாழ்வை எம்மோடு பகிர்ந்து கொண் டாரோ அதுபோல் நாமும் எம் வாழ்வை பிறரோடு பகிர்ந்து அவர்களுடைய நலவாழ்வுக்காக உழைக்க வேண்டும்.

பொதுநிலையினர் தினத் தன்று அதிகாலை நான்கு மணிக்கு எம் பயணத்தை ஆரம்பித்து காலை ஏழு மணித்திருப்பலியில் புதுக் குடியிருப்பு மக்களோடு புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் இணைந்து கொண்டோம். போரின் அகோரத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு சிதைந்த நிலையிலிருந்த புனித சூசையப்பர் ஆலயம் அதைச் சுறறி வாழும் மக்களின் உருக்குலைந்த நிலையை எமக்கு உணர்த் தியது. திருப்பலி வேளை யில் கொட்டும் மழை யிலும் ஆங்காங்கே ஒரு சிலர் குடைகளைப் பிடித்த வண்ணம் நிற்க ஏனையோர் மரங்களுக்கு கழே ஒதுங்கி நின்று திருப்பலியில் பங்கு கொண்ட காட்சி எங்கள் மனங்களை உருக வைத்தது.

திருப்பலி முடிவில் கொடடும் மழையின் மத்தி யிலும் நாம் அனைவரும் குழுக்கள் குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு வட்டா ரங்களுக்கு சென்றோம். கொட்டும் மழையிலும் மக்களை கொட்டில் கொட்டி லாக குடிசை குடிசையாக நாம் சென்று சந்தித்தோம். நாம் கண்டவை கேட்டவை களை சொல்லில் வடிக்க முடியாது. ஏனென்றால் வார்த்தைகளிலும் பார்க்க அவர்கள் கண்களிலிருந்து வடிந்தோடிய கண்ணீர் அதிகம் அளவிட முடியாத தும் கூட இத்தனை சோகக் கதைகளுக்கு மத்தியிலும்



புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயம் - இன்று

அவர்களுக்கு இருந்த ஆழமான விசுவாசம் எம் ஒவ்வொருவரையும் கவர்ந் தது. யாருக்கு யார் ஆறு தல் கூறுவது. இறைவன் ஒருவரே எமக்கு ஆறுதல் என நம்பி வாழ்ந்து கொண் டிருப்பவர்கள் அவர்கள் மீள் குடியேற்றம் என்ற போர்வையில் வாழ்க்கை எனும் நாடகம் மேடையேறு வதற்கு அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கு தான் அவர்களது வீடுகள். ஏனெனறால் அவர்கள் வீட்டிற்கு கூரையில்லை, கதவு இல்லை, சுவர்கள் இல்லை பெரும்பாலானவை தறப்பாள் கொட்டில்களா கவும், தகரக் கொட்டில் களாகவும், மரநிழல்களா கவும் இருந்தன. போரின் அகோரத்தனம் அவர்கள் முகங்களில் தெரிந்தது. இழப்புக்களின் தழும்புகள் அவர்கள் முகங்களில் ரேகைகளாக தெரிந்தன. எல்லா வீடுகளிலும் உயி ரிபுக்களும், ஊனமுற்ற வர்களும், காயப்பட்டவர் களும் இருககத்தான் செய் தார்கள். இந்த நிலை யிலும் வாழ வேண்டும் என்ற துடிப்பு அவர்கள் முகங்களில் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருந்தது.

இத்தனை அனுபவங் களையும் கொட்டும் மழையிலும் அவர்கள் கொட்டித் தீர்த்தார்கள். இவ்வாறான ஒரு சூழ் நிலையைக் கண்ட எம் மனம் ஒரு கணம் கலங் கியது. நாம் எடுத்துச் சென்ற சிறிய பொதிகளை அதிக தேவையிலிருப் போருக்குப் பகிர்ந்தளித் தோம். அதிலும் சிலர் தம் மிலும் பார்க்க யார் யார் அதிக தேவையிலிருக்கின் றார்களோ அவர்களை எமக்கு இனங்காட்டி அப் பொதிகளை அவர்களுக் குக் கொடுக்க உதவி னார்கள். இத்தனை பெரும் துன்பத்தின் மத்தியிலும் மற்றவர்களுக்கு உதவும் மனநிலை கண்டு அம் மக்களைப் பற்றிப் பெரு மிதம் அடைந்தோம்.

இத்தனை துன்பங்கள் மத்தியிலும் அந்த மக் களின் வரவேற்பும் உப சரணையும் எம்மைக் கவர்ந் தன. மாலை மூன்று மணி யளவில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் ஒன்று கூடினோம். சிதைந்து போயிருந்த கட்டடத்திற் குள்ளே அருட்சகோதரி கள் பணிக்களத்தில் இன் முகத்தோடு வரவேற் றார்கள். சிறிது நேரத்தை அவர்களுடன் களித்து விட்டு அங்கிருந்து புறப் பட்டோம். எம் எல்லோர் மனங்களிலும் ஒரு தவிப்பு இம்மக்களுக்கு ஏதாவது செயய வேண்டும் என்பது தான் அத்தவிப்பு.

அன்று பொது நிலை யினர் தினமாதலால் அந்த நாள் அனுபவம் எம்மைச் சிந்திக்கத் தூண் டியது. அந்த நாள் பொது நிலையினர் வாழ்வையும் பணியையும் சிந்தித்த நாள் மட்டுமல்லாமல் அதை வாழ்வில் வாழ்ந்த நாளும் கூட என்பது தான் எமக்கு மகிழ்ச்சியையும் தருகின்றது.

*சகோ. யோசப் பிரான்சிஸ்*
*வின்செண்டிபோல் சபை*

# விம்மலின் விம்பங்கள்

முல்லையிலும் ? பெத்தலகேம்

சென்றவாரம் முல்லைமண் நோக்கி எம் மக்களைத் தரிசிக்கச் சென்ற போது என் உள்ளத்திலும் என் கமராவிலும் பதிந்தவை இவை - ஆசிரியர் -



இறுதிப்போரின் போது காயமுற்று இடுப்பின் கீழ் இயக்கமற்று வாழ் வாதாரத்திற்காக இயங்கும் சகோதரன்.



குண்டுவெடிப்பில் இருகால்களையும் இழந்த போதும் தன்நம்பிக்கை இழக்காது குடும்பத்தை உயர்த்த பலசரக்குக் கடையில் பாடுபடும் தந்தை.



வீட்டு வாசல்களில் மிதிவண்டிகளையும், மோட்டார் வண்டிகளையும் பார்க்கும் இக் காலத்தில் வன்னி வாழ் மக்களின் வீட்டுவாசல்களில் நான் கண்டவை.



பாலகனோடு வாழ்வாதாரத்திற்காக இயங்கும் தாய் இவர். முல்லையும் ஓர் பெத்தலகேமா? என சிந்திக்க வைத்தது என்னை.



மீள்குடியேறும் புதுக்குடியிருப்பு மக்களோடு மக்களாக பணி புரியும் திருக் குடும்ப கன்னி யர்கள் இவர்கள்.

## துளிர்க்கும் ...(14ம் பக்கத் தொடர்ச்சி)

அயலவரின் வீட்டில் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டி ருந்தான்.

அப்போது அயலவரை சந்திப்பதற்காக ஒரு தொழிலதிபர் வந்திருந்தார். அவர் மூன்று தொழிற்சாலைக்கு சொந் தக்காரர். அவர் கண்ணனின் சுறுசுறுப்பு மிகுந்த வேலையை அவதானித்து 'யாரந்தப்பையன் நல்ல சுறுசுறுப்பா வேலை செய்கின்றான்' எனக் கேட்டார். அதுவா அது நம்மட சுந்தரத் தின் பையன். எப்படியிருந்த குடும்பம் இப் இந்த நிலைக்கு வந்திட்டுது' என பெருமூச்சு விட்டவாறு பதிலளித்தார் அயலவர். அப்போது ஆச்சரிய மிகையுடன் 'அட நம்ம சுந்தரத்தின் பையனா. அந்தக் குடும்பத்திற்கு என்ன நடந்தது. நல்லா இருந்த குடும்பமெல்லே, நான் இந்தளவுக்கு வளருறதுக்கு காரணம் அந்தச் சுந்தரந்தானே. அந்த நல்லமனுசனுக்கு இந்த நிலையா' எனக்கேட்டவர் உடனே 'நான் சுந்தரத்தை பாரத்திட்டு வாறன்' என சுந்தரத்தை சந்திப்பதற்காக விரைந்தார் இந்த தொழிலதிபர். சுந்தரத்தின் வீட்டு வாச லருகே போய் 'சுந்தரம் சார். சுந்தரம் சார்' என் கூப்பிட்டார் அந்த தொழிலதிபர். அப்போது 'எடியே கமலா யாரோ வந்திருக்கினம் பாரடி' என தொனிக்குரலுடன் சொன்னார் சுந்தரம். அப்போது கமலா வீட்டு வாசலருகே போய் 'வணக்கம் வாங்கோ உள்ளுக்கு' என்று தொழிலதிபரை உள்ளே கூப்பிட் டார். அவரும் உள்நுழைந்த போது சுந்தரம் சாய்மனைக் கட்டிலில் மதுபோதையில் மல்லாந்து படுத்துக்கிடந்தார். அப்போது இந்த தொழிலதிபர் 'வணக்கம் சுந்தரம் சேர் என்னத் தெரியுதா' எனக் கேட்டார். அப்போது கண்ணைச் சிமிட்டிய வாறு உற்று நோக்கி 'முகம் கொஞ்சம் ஞாபகம் மாதிரி தெரியுது ஆனால் சரியா புடிபடுதில்ல' எனக்கூறிடவே தம்மைப் பற்றியும் தான் இந்நிலைக்கு வந்ததிற்கு சுந்தரம் செய்த உதவி என்பதையும் தெரிவித்தார் அந்த தொழிலதிபர் அத்துடன் 'சேர் நீங்க செய்த உதவிக்கு பிரதி உபகாரம் செய்யிறதுக்கு நல்ல சந்தர்ப்பம் எனக்கு கிடைச்சிருக்கு எனது தொழிற் சாலைக்கு முகாமையாளராக நீங்கள் தான் வரவேண்டும் பிளீஸ் தயவு செய்து மறுக்க வேண்டாம் சேர்' என்று கேட்டார். அவரும் தன் வறுமை தனை போக்க ஆண்டவன் விட்ட வழி எனக்கு கிடைச்ச வரப்பிரசாதம் இனிமே நான் குடிக்கவே மாட்டன்' என்று மனமகிழ்ச்சி பொங்க புன்சிரிப்புடன் பதிலளித்தர் சுந்தரம்.

சுந்தரம் பதில் சொல்லி முடிப்பதற்குள் கண்ணன் தனது வேலையை நிறைவு செய்து வியர்வை தோய்ந்த வதனத்துடன் வீட்டுக்கு வந்தான். அப்போது அந்த தொழிலதிபர் 'தம்பி இனிமேல் நீ வேலைக்கு போக வேண்டாம். நான் அந்த அயல வருடன் இது சம்பந்தமா கதைக்கிறன் நீ சின்னனில நல்ல கெட்டிக்காரன் எண்டு அப்பா சொல்லி சந்தோசப்பட்டிருக்கிறார். சின்னனிலயே நீ டொக்ரரா போகவேணும் எண்டு அப்பா ஆசைப்பட்டவர் நான் உனக்கு படிக்க உவி செய்யிறன் சீ அப்பான்ர ஆசை மாதிரி படிச்சு டொக்ரரா வரோணும்' என்று கூறினார். படிக்க வேண்டுமென்ற ஆசைகளை புதைத்து விட்ட கண்ணனிற்கு மீண்டும் புத்துயிர்ப்பு பெற்றது போன்ற ஒரு அளவுகடந்த அக்களிப்பு அவன் மனந்தனில் தவழ்ந்தது. மீண்டும் புதுப்படைப்பு பெற்றவனாய் எதிர்கால இலட்சிய வேட்கையுடன் பயணிக்க ஆரம்பித்தான் கண்ணன்.....

M.A. நிரோஷன் ஆசிரியர்
(புனித பத்திரிசியார் கல்லூரி.)

# மீண்டும் பிறந்திட வேண்டும்



இன்றை சூழமைவில் இயல்பு வாழ்வு நோக்கிய நம் பயணத்தில் நசரேத்தூர் இயேசுவின் பிறப்பு நிகழ்வை நினைவு கூர்கின்றோம். கிறிஸ்தவ விசுவாசிகள் எங்கள் வாழ்வில் இயேசுவின் பிறப்பு மிகவும் அடிப்படையான நிகழ்வாகும். கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு அது அகரநிகழ்வாகும்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒளியில் இன்றைய சூழமைவில் இயேசுவின் பிறப்பு நிகழ்வை எப்படி நோக்குவது? நசரேத்தூர் இயேசுபிறந்த சூழல் நமக்குத் தரும் செய்தி என்ன? இவ்வினாக்களுக்கு விடையாக வளர்கிறது இச் சிறிய எண்ணக்கரு.

## குடிசையில் "மனுவுரு"

இயேசுவின் பிறப்பு ஓர் எளிமையான சூழலில் நிகழ்ந்தது. அடிப்படைவசதிகள் எதுவு மில்லாத கதவு யன்னல் இல்லாத குடிசையில் பாதுகாப்பற்ற கொட்டிலில் நிகழ்ந்தது. அன்றைய அரசியல் ஆதிக்க அச்சுறுத்தலில் இடப்பெயர்வும் பாதுகாப்பின்மையும் கொண்ட சூழலில் நிகழ்ந்தது. பிறந்த குழந்தை பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டிய இடறல் நிறைந்த சூழல் அது மனுவுருவானவருக்கு ஏற்பட்ட அவ்வனுபவம் இன்றும மானிடம் பாதுகாத்து வளர்க்கப்படவேண்டும் என்பதை உணர்த்துகின்றது. பாதுகாப்பின்மையில் நாம் காணும் மனுவுருவானவர் தாய் மரியாள் நேர்மையாளர் சூசைபோன்ற மானிடரின் பராமரிப்பைப் பெற்று வளரும் பாங்கு, நம் சூழமை வில் மானிடம் காப்பது நம் அறக்கடன் என்பதை உணர்த்துகின்றது. நம் இறைநம்பிக்கையில் நாம் விசுவசிக்கும் கடவுளின் பிரசன்னத்தை இருப்பை இடர்பாடுகள் பாதுகாப்பின்மை, அச்சுறுத்தல் என்பன மத்தியில் விடப்பட்ட "குழந்தை" உருவில் காண அழைக்கப்படுகின்றோம். மனுவுருவன இயேசுவின் பிறப்பு "கடவுளை" நம் குடிசையில் கொட்டில்களில் தவழும் குழந்தை உருவில் கண்டு விசுவசிக்க எதிர் நோக்குடன் ஐயப்பாடின்றி "மானிடம்" பேண வளர்க்க தூண்டலாகின்றது.

## குடிகொண்ட "மனுவுரு"

பாதுகாப்பற்ற கொட்டிலில் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட இயேசுநம் மக்களிடையே குடிகொண்டார் *(யோவா 1:14)* நம் மக்கள் ஆயனில்லா ஆடுகள் போல் அலைக்கழிக்கப்படுவதைக் கண்டார் *(மத் 9:35)* அச்சமும் அங்கலாய்ப்பும் கொண்டவர்களாய் எதிர்காலத் தெளிவு அற்றவர்களாய், புலம்பி அழுவோராய் ஏளனம் செய்யப் பட்டவராய், அடக்கி ஒடுக்கப் பட்டவராய், புறந்தள்ளப்பட்டோராய்,வாழ்வுக்காய் ஏங்கி நிற்போராய்க் கண்டார். *(லூக் 6:20, மத் 5:3-10)* மக்களின் இந்த நிலை இறைவனின் விருப்பு அல்ல என திடமாக நம்பினார் இயேசு. இறைவன் நாடும், விரும்பும் மானிட வாழ்வு நிறைவானது; மாண்பு மிக்கது; சுதந்திரமும், சுயநிர்ணயமும் கொணடது; நிகழ்கால உறுதிப்பாடும் ஏற்றுக கொள்ளுதலும் உடையது; எதிர்கால நம்பிக்கை யூட்டுவது இறைவன் நாடும் மானிடவாழ்வின் உண்மையை ஆழ உணர்ந்த இயேசுவாழ்வைத் தரவந்தேன் அதை நிறைவாகவே தரவந்தேன். *(யோவா 10:10)* என ஐயம் திரிபுற அறிக்கையிட்டார். தம் சூழலில் மானிடம் பேணி வளர்க்கப்பட தம்மையே அர்ப்பணித்தார். *(யோவா 10:17-18)* இயேசுவில் குடிகொண்ட பிரசன்னமும் மானிடம் பேணும் பணியும், வாழ்வும் மானிட ஈடேற்புக் கடமையில் தவறுபவர்கள் தம் மீட்பின் பாதையிலிருந்து தவறுகிறார்கள் என்பதையே உணர்த்துகின்றது.

இன்று கருவில் கலையும் மனிதம் கல்விக் கூடத்தில கதறும் மனிதம் கைக்கெட்டாத வளங்களுடன் கண்ணீர் வடிக்கும் மனிதம், காவல்கண் காணிப்பாளர் என்போரால் சுரண்டப்படும் மனிதம், கடல் கடந்தும் கரைகாணாத மனிதம், கடவுள் பெயரைச் சொல்லியே ஏமாற்றபபடும் மனிதம், கல்லறைகளிலும் நிம்மதியில்லாத மனிதம் இப்பட்டியல் நீண்டது. இது "மனிதம்" பாதுகாக்கப்பட வேண்டியது. சமுதாயம் புதுப்பிக்கப்படவேண்டியது. என்பதையே உணர்த்துகிறது. இந்த அறக்கடனை நிறைவேற்ற இயேசுவின் பிறப்புச் சூழலும் அவரது குடிகொண்ட மனுவுருவும் சரியானது எதுவெனத் தீர்மானிக்க உங்களால் ஏன் முடியவல்லை *(லூக் 12:57)* என்ற வினாவை எழுப்புகின்றது. இயேசுவின் மனுவுருவான நிகழ்வில் நம்பிக்கை கொண்டவர் இதற்கு பதில் காண்பது அவரது விசுவாசக் கடப்படாகும்.

## குடிகொண்ட "மனு"

இன்றைய சூழமைவில் இயேசுவின் பிறப்புநிகழ்வில் நம்பிக்கை வளர்க்கும் நாம் மறுமனுவுருவாகிட வேண்டும். இயேசுவை இரவில் சந்தித்த நிக்கதேமுவிடம் மீண்டும் பிறக்க வேண்டும் என்ற செய்தியை இயேசு அளித்தார் *(யோவா 3:1)* இந்தஅழைப்பு இயேசுவின் மனுவுருவில் பங்கு கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

இயேசுவின் மனுவுரு பராமரிப்பும் பரிவும் கொண்ட இறைவனை பாதுகாப்பின்மையில் கைவிடப்பட்ட பலம்மிக்க இராணுவத்தினர் மத்தியில் காணப்படும் குழந்தைஉருவில் இறைவனை வெளிப்படுத்துகின்றது. அவ்விறைவனின் ஆட்சக்குள் வர அவரது வல்லமையில ஆட்கொளளப்படுவதே மனுவுருவாதலாகும். மீண்டும் பிறத்தலகும்.

புனித பாவுலு "கடவுளின் ஆவியால் வழிநடத்தப்படுபவர்களே" கடவுளின் பிள்ளைகள் *(உரோ. 8:14)* என்பார். மனுவுருவாதல் இயேசுவின் கடவுளின் ஆவியில் பிறந்தலாகும். அதன் விளைவாக ஒருவர் உள்ள சுதந்திரத்துடன் வாழ்வார். கடவுளுக்கு ஏற்புடையதை நாடுவார்கள் இறையரசு விழுமியங்களை வாழ்வாக்குவார்கள். அதனால் மனிதநேயமும், மனிதமாண்பும் பேணப்படும். அதுவே மனுவுருவான நிகழ்வின் மனுவுருவானவர் குடிகொண்ட நிகழ்வின் நோக்கமாகும்.

இயேசுவின் மனுவுரு கிறிஸ்தவ விசுவாசியை மீண்டும பிறக்கத் தூண்டுகின்றது. அதாவது இயேசுவின் கடவுளின் உருவை நமக்குள் கருக்கொள்ளவும் குடிகொள்ளவும் செய்வதாகும். வீடு திரும்பிய மகனை அரவணைத்து பாதணி அளித்து மோதிரம் அணிவித்து ஆடை போர்த்தி, விருந்தளித்து அவனுக்கு வாழ்வளிபபவர் இயேசுவின் கடவுள் *(லூக் 15:11)* தொலைந்த மானிடத்தை மீட்பது இப்படித்தான் என்கிறார். அரவணைபபு, பாதுகாபபு, அடையாளப்படுத்தல் சமத்துவ சுயநிர்ணய உறவுக்கு வழி செய்தலே அம்மீட்கும் வழியாகும். மேலும் வழியோரத்தில் கைவிடப்பட்டகாயப்பட்டவன் உடைமைகளை இழந்தவன், உயிருக்காக காத்திருந்தவன் இயேசுவின் கடவுள் அத்தகையவர்களை தூய்மைப்படுத்தி திடப்படுத்தி புதுவாழ்வளித்து பாதுகாப்பும் பராமரிப்பும் அளிக்கும் நல்ல சமாரித்தன். இத்தகைய கடவுளின் உருக்கள் நமக்குள் பிறந்தால் நாமும் நம்மவர் மத்தியில் மானடம் காப்பவராய் பிறப்போம். இயேசுவின் மனுவுருவாக நாமும நம்மவர் மத்தியில் குடிகொள்ளலாம்.

மனுவுருவாகி குடிகொண்ட இயேசு நம்மை சீடத்துவ வாழ்வுக்கு சுமக்கின்றார். பெருமளவில் கிறிஸ்தவர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு இயேசுவின ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்துடன் வாழ இயேசுவை போல நம் சூழமைவில் குடிகொள்ள அனைத்துக்கும் மேலாக இறையரசையும், இறைவனுக்கு ஏற்புடையதையும நாட *(மத் 6:33)* உண்மைக்கு சாட்சியம் பகரவே வந்தேன் *(யோவா 18:37)* என்ற இயேசுவின் நிலைப்பாட்டைப பொய்மை நிறைந்த சூழமைவில் வாழ, யாரும் யாவரும் என்னை விட்டுப போனாலும் நான் தனிமையில் அல்ல தந்தை என்னோடு இருக்கின்றார். *(யோவா 16:32)* எனத் துணிவு கொள்ள வேளை வரும் போது இயேசுவைப் போல உயிரையும் துறக்க தயாராய் இருப்பது சீடத்துவ வாழ்வு. அது இயேசுவின் ஆவியால் ஆட்கொளளப்பட்டு மீண்டும் பிறப்பதால் விளைவதாகும்.

மீண்டும் பிறப்பது கிறிஸ்தவனுக்கு இன்றும் அறக்கடனாகிறது. இறையரசின் அறம், அதற்கு முரணான நம் சிந்தனைப்போக்கு வாழ்க்கைப் பாங்கு நாம் செய்யும் முடிவுகளுக்கும தூண்டலாயிருபபவை நம் விழுமியங்களுக்கு அடிப்படையாய் இருப்பவை, நம் தொடர்பாடல்கள் என இன்ன பலவற்றிலிருந்து மாற்றமடைந்த வாழ்வு வாழ அடிப்படையாகின

**அருட்பணி. ஜெராட் டீ ரொசய்ரோ அ.ம.தி**

றது. அத்தகைய அடிப்படையான மனமாற்ற வாழ்வே மீண்டும் பிறப்பது மனுவுருவாகுதலாகும்.

முடிவாக இயல்பு வாழ்வு நோக்கிய இன்றைய நம் பயணத்தில் இயேசுவின் பிறப்பு நிகழ்வின் நினைவில் வளர்ந்த எண்ணக்கரு இதுவாகும். இயேசுவின் பிறப்பு நிகழ்வு மானிடம் பாதுகாக்கப்பட வேணடும் என்பதை வலியுறுத்துகின்றது. மானிடத்தை பாதுகாப்பதன் வழியாகவே இயேசுவின் கடவுள் காண விரும்பும் மாண்பு மிக்க, சுதந்திரமும், சமத்துவமும், சுய நிர்ணயமும், கொண்ட மானிடத்தை பிறக்கச் செய்யலாம். புதிய சமுதாயத்திற்கு வித்திடலாம். புதிய சமுதாயத்தை எதிர் நோக்கலாம் *(உரோ 14:17)* இயேசுவின் குடிகொள்ளும் பாங்கு அவரது மனுவுருக்கு, மனுவுருவான நிகழ்வுக்கு முழு வடிவமளிக்கின்றது. பல்வேறு வழியில் பேசிய கடவுளே தம் மகன் வழியாகப் பேசும் *(எபி 11:1)* குரலைக் கேட்க அழைக்கின்றது. அக்குரல் பாதரட்சைகளைக் களைந்து விட்டு எரியும் புதரில் அவரது குரல் கேட்டு வழிநடக்க *(யாத் 3:8)* மீண்டும் விடுதலைப் பயணத்தை தொடர அழைக்கின்றது. இது மனுவுருவான இயேசுவைப் பின்செல்லும் பயணமாகும்.

# கிறிஸ்து பிறப்பு விழாவின் பின்னணி

பலநூறு ஆண்டுகளாக நாம் கிறிஸ்து பிறப்புவிழாவை பெருமகிழ்வுடன் கொண்டாடி மகிழ்கின்றோம். ஆனால் எவ்வாறான மனநிலையோடு அல்லது ஆயத்தத்தோடு கொண்டாடுகின்றோம் என்பதை ஒருமுறை சிந்தித்துப் பார்ப்போம். இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா எங்கே முதலில் கொணடாடப்பட்டது? எம்முடைய திருவிவிலியம் கிறிஸ்து பிறபபு விழாவினை பற்றிய சான்றுகளைத் தருகின்றதா? அல்லது வேறு கலாச்சாரத்தில் இருந்து இவ்விழா எம்முடைய மதத்திற்கு கொண்டுவரபபட்டதா? என்பதை சற்று இங்கே ஆராய்வோம்.

நறசெய்தியின் பினனணியிலே பார்க்கின்றபோது கிறிஸ்து பிறப்புவிழாக் கொண்டாட்டத்தின் ஆதாரங்கள் ஏதும் ஆதிக் கிறிஸ்தவர்களிடம் காணப்படவில்லை. ஏனெனில் கிறிஸ்தவர்கள ஒருவரின் இறப்பைக் கொண்டாடுவார்களே தவிர பிறப்பை அல்ல. கிறிஸ்தவர்கள் கிறஸ்து பிறப்புவிழாவை கி.பி 34ல் கொண்டாடத் தொடங்கியதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. கி.பி 4ம் நூற்றாண்டில் இருந்தே இவ்விழா மார்கழி 25ம் நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழா முதன் முறையாக ரோமாபுரியிலும் மேற்கு ஐரோபபாவின சிலபகுதிகளிலும் தென்கிழக்காசியாவின் சில பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது.

புற இனத்தார் (Pagan) தம் இயற்கைக் கடவுளை நினைத்து மார்கழி 25ம் திகதி பெருவிழா கொண்டாடினர். இவர்கள் மனம் மாறிக் கிறிஸ்தவர்களான வேளையில் இவர்களது கலாச்சாரப் பழக்க வழக்கம் கிறிஸ்தவத்திற்குள் செல்வாக்குச் செலுத்தின. இதனால் இவர்கள் மார்கழி 25ம் திகதியினை கிறிஸ்து பிறப்பு விழாவாகக் கொண்டாடத் தொடங்கினர். இவ்விழா உயிர் பெற உழைத்தவர்கள் புனிதர்களான நீக்கிலஸ் மற்றும் பிரான்சிஸ் என்போராவர். பல்வேறுபாரம்பரியங்களைக் கொண்டிருக்கும் திருச்சபை கிறிஸ்து பிறப்பு விழாவை மார்கழி 25ம் திகதி ஒரு பாரம்பரியமாகக் கொண்டாடி மகிழ்கின்றது. எனவே மானிடர் எம் மீட்புக்காக ஒளியாக இவ்வுலகிலே உதித்த யேசுபாலகனின் விழாவினை மகிழ்வுடன் கொண்டாடி அவராசி பெறுவோம்.



**அருட்.சகோ. மடுத்தீன் தேவராஜன்.**

## சிந்தனைக்கு

நத்தார் காலம் வந்து விட்டால் எமது உள்ளங்கள் குழந்தை போல் மாறிவிடுகிறது. இந்தக் காலத்திலாவது நாம் குழந்தை போல் கள்ளங் கபடில்லாமல் மாறுவோமா?

☆ ☆ ☆

கிறிஸ்மஸ் வந்துவிட்டதா? யார் யாருக்கு என்ன பரிசுப்பொருட்கள் கொடுக்கலாம். அது உங்கள் விருப்பம். கடவுளே இதனை முதல் கிறிஸ்மஸில் ஆரம்பித்து வைத்தார். தனது ஒரே பேறான மைந்தனை இந்த உலகுக்குப் பரிசாக அளித்ததன் மூலம்.

## நீங்காத நினைவுகள்
## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 16 - 06 - 1929



உதிர்வு 05 - 12 - 2011

### மரியாம்பிள்ளை ராஜேந்திரம்
### (லண்டன்)

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பொக்கிஷமாய்
பண்பிலே நல்ல மனிதனாய்
குடும்ப வாழ்விலும், சமூக பணி வாழ்விலும்,
இறைசேவையிலும்
மண்ணக வாழ்வை வாழ்ந்து முடித்தவரே
நீர் இறைபாதம் அடைந்து ஓராண்டுகள் உருண்டோடியும்
எம் இதய ஓலங்கள் ஓயவில்லையே
இன்று நீர் எமதருகில் இல்லையே இருந்தும் எம்
நெஞ்சை விட்டகலாத அகல் விளக்காய்
எம் நெஞ்சில் இருப்பீர்கள்
உங்கள் ஆன்ம அமைதிக்காக
என்று இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

தகவல்
அ. எட்வேட்
Add-102/12

உம் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1950 - 03 - 24



மண்ணின் மடியில் 1995 - 12 - 18

### அமரர். தேவசகாயம் சிமியோன்
### (அனிபபா)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்கள் (யோ: 11:25)"

ஆண்டுகள் பல போனதே - ஐயா
ஆறவில்லை எம் இதயம்
மீண்டும் உம் புன் சிரிப்பை காண - ஐயா
ஏங்குது என் இதயம்.
வருந்தி நாம் அழைக்கின்றோம் - ஐயா
நீங்கள் திரும்பவும் எம்முடன் வந்து
சேர்ந்திடுவீர் என்று.

நாவாந்துறை வடக்கு
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

Add -100/12

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 11 - 02 - 1933



விண்ணில் 08 - 11 - 2012

### அமரர். யோண் யோட்ஜ்
### அந்திரேஸ்பிள்ளை

பாசமழை பொழிந்து பாரினில் எமை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு சென்றீர்கள்
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும் ஆத்ம
சாந்திக்காக

இவரின் ஆன்ம சாந்திக்காக 10.12.2012 காலை 6.00 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்திலும், மவுண்ட்லவெனியா புனித நீற்றம்மாள் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Add-101/12

## 1ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

அவனியில் 19 - 03 - 1939



ஆண்டவனில் 14 - 12 - 2011

### அமரர் பிலிப்பு – சூசைதாஸ்

"இறக்கத்தான் பிறந்தோம்
அதுவரை
இரக்கத்தோடு இருப்போம்"
என்னும் அன்னை திரேசாவின்
அன்பு மொழிக்கு இலக்கணமான
அன்பு அப்பா! நித்தியமும்
ஆண்டவன் சந்நிதியில் மகிழ்ந்திருக்க
அயராது செபத்தில் இணைகின்றோம்

தகவல்
S.M. வுளோறன்ஸ்
சென். ஜேம்ஸ் வீதி, இளவாலை

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 30ம் ஆண்டு நினைவில்..

அமரர்
### மரியான் சூசைப்பிள்ளை
(ஆசிரியர், சமாதான நீதவான்)

மண்ணுலகில் 14 - 04 - 1926



விண்ணுலகில் 03 - 01 - 1983

*ஏற்றி வைத்த ஏணி*
*உம்மை போற்றுகின்றோம் என்றுமே*

இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற
பிரார்த்திக்கும்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, உறவினர்கள்.

இளவாலை மேற்கு,
இளவாலை.

## விண்ணக வாழ்வின் 1ஆம் ஆண்டு
## நினைவஞ்சலி

வல்லையில் பேரின்பமாய் தாய்மடியில் 12 - 07 - 1942



பேரின்ப வான்வீட்டில் 22 - 12 - 2011

### Dr. மரீசலின்பிள்ளை மரியதாசன்
### (பேரின்பம்)

சுகாதார வைத்திய அதிகாரி யாழ் மாநகர சபை (2001 - 2011)
சமாதான நீதவான்
"உயிர்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

ஆவே மரியா
72, கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

உத்தமரே உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## நீங்காத நினைவுகளில்

1ம் ஆண்டு 14ம் ஆண்டு



செல்லத்துரை றெஜினா பூமணி
மண்ணில் ☆ விண்ணில்
13-10-1929 02-01-2012

யோசேப் செல்லத்துரை
மண்ணில் ☆ விண்ணில்
05-05-1923 22-06-1999

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான"

இவர்களுடாக நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறுகின்றோம் தந்தையே. ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி 02.01.2013 காலை 6.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

13, மவுண்காமல் வீதி,

Add-103/12

குடும்பத்தினர்


## வயோதிபரை பராமரிக்கும் தாதிய பயிற்சி நெறி

## Holy Cross School of Health Science

| | | |
|---|---|---|
| பயிற்சி நெறிக்காலம் | - | 9 மாதம் |
| ஆரம்பம் | - | 26.01.2013 |
| பயிற்சி நேர வகுப்புகள் | - | சனி, ஞாயிறு (மாதங்களில் இரு தடவை) |
| பயிற்சி கட்டணம் | - | 3500/ |
| தகுதியுடையோர் | - | க.பொ.த. சாதாரணம் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம் |
| விண்ணப்ப முடிவுத்திகதி | - | 31.12.12 |

பணிப்பாளர் தொலைபேசி இலக்கம்
021 300 1102
021 221 9594

முகவரி
767/4, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.


## சிந்தனைத் துளி

இறந்துவிடுவோமோ என்று அஞ்சுவதை விட இறந்தபின் இறைவனை விட்டுப் பிரிந்து விடுவோமோ என்பதை நினைத்து அஞ்சு.

## நன்றிகளும் பாராட்டுக்களும்

எமது கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கு சிறப்பாக்கங்களை அனுப்பி வைத்த அனைத்து படைப்பாளிகளிற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளும் பாராட்டுக்களும். சிறப்பாக புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றம் வழியாக ஆக்கங்களைப் படைத்த அருட்சகோதரர்களிற்கு மிக்க நன்றிகள். பலரது ஆக்கங்கள் தரமுள்ளதாக இருந்தும் இடப் பற்றாக்குறையினால் பிரசுரிக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம். - ஆசிரியர் -

# மார்கழியில் உலகம் அழியுமா

2013

அருட்பணி. ஸ்ரனி அன்ரனி

இன்று உலகம் முழுவதிலும் பரபரப்பாக பேசப்படுவது மார்கழி 21ம் திகதி உலகம் அழியப்போவது என்பதுதான். இது யாருடைய கணிப்போ தெரியவில்லை. இது சோதிடத்தின் கணிப்பா அல்லது வானிலை விஞ்ஞானத்தின் கருதுகோளா என்று சொல்ல முடியவில்லை. சிலர் உலகம் சொன்னபடி அழிந்தால் என்ன செய்வது என்று தலையை பிய்த்து கொள்கின்றனர். இதைப் பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர் பலர். சிலர் இதனை வைத்தே நவீன கணனி தொழில நுட்பத்தை பயன்படுத்தி இறுவட்டுக்களை உருவாக்கி விற்பனை செய்வதாகவும் செய்திகள் கசிகின்றன. உலகம் பூராகவும் பல இடங்களில் இயற்கையின் சீற்றத்தின் விளைவாக வெள்ளப் பெருக்கும், நில நடுக்கங்களும், புயலும், கடற் கொந்தளிப்பும் எத்தனையோ அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவாக எண்ணற்ற மக்கள் உறவுகளை சொத்துக்களை இழந்து போனதை அறிகின்றோம். இவையெல்லாம் இயற்கையின் சீற்றமா? அல்லது இறைவனின் சீற்றத்தின் வெளிப்பாடா? என்று சிந்திக்க வைக்கின்றது. அத்தோடு அடிப்படைவாத குழுக்களும் மக்களை உலக அழிவைப் பற்றி குழபபி வாழ்வை திசை மாறச் செயதுள்ளனர். எது உண்மை? எது பொய்மை? என குழம்பிப் போயுள்ளது இன்றைய உலகம்.

## இறைவனே காலத்தின் காரணகர்த்தா

காலங்களும் யுகங்களும் இறைவனுடைய கரத்திலே உள்ளன என்பதே எமது நம்பிக்கையாகும். உலக அழிவை குறிப்பிட்டு வழங்கப்படும் வழிகாட்டல்களும் அறிவுரைகளும் உண்மையற்றவையே. ஏனெனில் படைப்பின் முதல்வராக, காலச்சக்கரத்தை இயக்குபவரும், நிர்ணயித்து செயற்படுத்துவரும் இறைவனே என்று சொன்னால் மிகையாகாது. இறுதிக் காலத்தின் முடிவைப்பற்றி அறிந்து வைத்திருப்பவர் அவர் ஒருவரே. இயற்கையின் சீற்றத்தை பற்றி விஞ்ஞான ரீதியாக எதிர்வு கூறலாம். ஆனால் இயற்கையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் அதிகாரமும் வல்லமையும மனிதனுக்கு கிடையாது. உலகின் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவால் "சாண்டி" என்ற புயலை கட்டுபபடுத்த முடிந்ததா? நிறைவுகாலம் என்பது இறைவனின் திட்டப்படியே நிகழ்கின்றது. உலகில் இறைவனால் படைக்கப்பட்ட அனைத்திற்குமே ஒரு ஆரமபமும் முடிவும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே மனிதன் நினைத்தபடி அனைத்தும் நிகழ்வதில்லை, அமைவதில்லை. ஆக்கலும் அழித்தலும் அவர் கரங்களில் தான் இன்றும் உள்ளன என்பதை இயற்கையின் சீற்றங்கள் வெளிப்படுத்துகின்றன. மனிதன் தன்னால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாத சக்தி ஒன்று உண்டு எனபதை உணர்வு பூர்வமாக இயற்கையின் சீற்றம் மூலம் புரிந்து கொள்கின்றான். இதுவே இன்றைய இறைவனின் இறை வெளிப்பாடாக அமைகின்றது என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. இயற்கையின் சீற்றத்தை கண்டு தான் கடவுளின் சக்தியை உணருகின்றான்.

## காலத்தின் அறிகுறிகளை விளங்க வேண்டும்

இறைவன் குறித்த நேரத்தையும் காலத்தையும் யாரும் அறிய முடியாது என்பதே உண்மையாகும். ஆனால் அக் காலத்தை கண்டறிய முன்னேற்பாடாக சில அடையாளங்களை, குறிகளை அறிந்து கொள்ளலாம். வானிலே கருமேகங்களை கண்டவுடன் மழை வரப்போகின்றது என்ற எதிர்பார்ப்பு இயல்பாகவே ஏற்படுகின்றது. இயேசுவின் இரண்டாவது வருகைக்கு முன்பு அரங்கேறும் அறிகுறிகளை அடையாளங்களைப் பற்றி விவிலியம் குறிப்பிடுகின்றது. "அந்த நேரமும் காலமும் தந்தைக்கன்றி வேறெவருக்கும் தெரியாது" என்ற இயேசுவின் கூற்று எல்லா கேள்விகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்றது. உலகம் எப்போது அழியும் என்ற கவலைகளில் மூழ்குவதை விடுத்து இன்று நாம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். இன்று நாம் வாழும் வாழ்க்கை முறை கடவுளுக்கு ஏற்புடையதாக, மனச் சான்றுடன் ஒத்துப்போவதாக அமைகின்றதா என்பதைப் பற்றிய கவலையே எழ வேண்டும். இவ்வுலகில் தோன்றும் அறிகுறிகளெல்லாம் எமது வாழ்க்கையை நெறிப்படுத்த, சீராக்க விடுக்கப்படும் அறை கூவல்களாக நோக்கப்பட வேண்டும். இறைவன் நமக்குத் தந்த ஒவ்வொருநாளும் அவரது இரக்கத்தின் அன்பின் கொடை என்பதை உணர வேண்டும். தொடக்க நூலின் பின்புலத்திலே மனிதன் செய்கின்ற ஒவ்வொரு பாவமும் அவனை மட்டுமல்ல, வாழும் சமூகத்தை இயற்கையை பாதிக்கின்றது என்பது கண்கூடு. இயற்கையின் அழிவு மீட்பு வரலாறறிலே வெள்ளப்பெருக்கோடு தொடங்கி போர்கள் அடிமைத் தனங்கள் போன்ற காலச்சக்கர சுவடுகளினூடாக பயணித்தே இறுதியில் இறைவனின் மீட்பை மக்கள் கண்டுணர்ந்தனர். இனறும் நடந்தேறும் இயற்கை அழிவுகளினூடாக மனித குலத்தை பண்படுத்தி, நெறிப்படுத்தி வாழ, மனமாற்றம் பெற்று இறைவன்பால் திரும்பவே இறைவன் வெளிப்படுத்தும் நிகழ்வுகளாக நோக்கப்பட வேண்டும். இதற்கு அப்பால் உலக அழிவு பற்றிய பரபரப்பான செய்திகளால் வாழ்வின் இலக்குகளை இழந்துவிடாமல் இறைவனை நோக்கிய பயணத்தில் நம்பிக்கையுடனும், நெறி தவறாமல் வாழவும் இறையருள் வேண்டி தொடர்ந்து பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## நம்பிக்கை வாழ்வை வளப்படுத்தவே!

இன்று உலகில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப மாற்றங்களினால் நம்பிக்கை குறிப்பாக இறைவனை மையப்படுத்தியதாக இல்லை. உலகத்தோடு ஒத்து போகும் வாழ்க்கை முறையும், உலகம் தரும் மகிழ்ச்சியை சுய இன்பத்தை கடவுளுக்கு மாற்றீடாக தேடும் நிலையே காணப்படுகின்றது. இது ஒரு அபாயகரமான கவலைக்குரிய நிலையாக தென்படுகின்றது. எல்லாவற்றையும் தொலைத்து, இழந்து நிற்கும் காலகட்டத்தில் இறைநம்பிக்கையையும் இழப்பது எமது வாழ்வில் அழிவையும், நிம்மதியின்மையையும் கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை. கடவுளுடன் தொடர்பில்லாமல், உறவில்லாமல் இன்று எத்தனையோ பேர் வாழ்ந்து வருகின்றனர். உலகப் போக்குகளுக்கு சோரம் போய் வாழ்க்கையை தொலைத்து உணமையை தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய பின்னணியிலே இயற்கை அழிவுகள் காலநிலை மாற்றங்கள், இயற்கையின் சீற்றங்கள் எல்லாம் இந்த உலகம் இன்றும் இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளதையே பறைசாற்றுகின்றது. எனவே இன்று நாம் செய்ய வேண்டியது என்ன? நிகழ் காலத்தில் நாம் செலவிடும் காலத்தை நன்மை செய்ய, அன்பு செய்ய, நன்னெறியில் வாழ பயன்படுத்துகின்றேனா? எதிர்காலக் கவலைகளை காலத்திடம் விட்டுவிட்டு, இறை நம்பிக்கையை ஆழப்படுத்த வளப்படுத்த இறைவன் தருங்காலமாக இயற்கை

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# துளிர்க்கும் மனிதம்

## குறுங் கதை

சூரியன் மெல்ல மெல்ல கீழ் அடிவானிலிருந்து சற்று உச்சிவானை வலம் வருகின்றான். அதனது பொற்கதிர் ஒன்று கூரை வழியே மல்லாந்து படுத்திருந்த கண்ணனின் கண்ணை கொள்ளையிட்டது. கண்ணனோ பதினைந்து வயதை எட்டிய சிறுவன் குடும்ப சூழ்நிலையால் பாதியில் கல்வியைத் துறந்து குடும்பத்தை தாங்கும் பாலமாக மாறிவிட்டான். ஒரு காலத்தில் மாளிகை போன்ற வீடு. அதுதான் அவ்வூரிலே பெரிய வீடு என மக்களால் அழைக்கப்பட்ட கண்ணனின் வீடு. வறுமை அறியா இளம் பருவம் இனிதே காலம் கடந்தது. யார் இட்ட சாபமோ இன்று சொத்திழந்து நிர்க்கதி நிலை. கடந்த காலத்தை எண்ணிக் கொண்டிருந்தான் கண்ணன். அவன் விழிகளில் கண்ணீர் சற்று கசிந்தது. அவன் கண்களைக் கசக்கி கொள்கிறான் அப்போது "தம்பி எழும்பி வாடா பழந்தண்ணி கரைச்சிருக்கிறனடா" அது யாருமல்ல கண்ணனின் அம்மா கமலா. அக்குரல் கேட்டு வயிற்றை நிரப்புவதற்காக கண்ணன் நடக்கின்றான். அப்போது "இந்தாடா தம்பி" என்று கமலா பழந்தண்ணீர் கிண்ணத்தை நீட்டினாள். அதனை கண்ணன் வாங்கிக் குடிக்கவே கமலா கண்ணனின் தலையை பரிதாபத்துடன் தடவினாள். ஏனென்றால் முன்னைய காலத்தில் பெறுமதி மிக்க உணவுகளையே உண்டவர்கள் இன்று இந்நிலையை அடைந்ததை எண்ணி மனக்கவலை பொங்கியமையே. 'கொடிய யுக்கத்தால் வீடு வாசலையெல்லாம் இழந்திட்டது ஒரு பக்கமிருக்க உன்ர கொப்பர் உழைச்சு குடிச்சுக்கிட்டே இருக்கிறார் இந்த கடவுள் எப்பதான் கண்ண திறப்பாரோ தெரியல' இன்றைய நிலை யெண்ணி கமலா வாய் புலம்பியது அப்போது 'அம்மா கவலப்படாதயன நான் எப்படியும் நல்லா உழைச்சு உங்கள காப்பாற்றுவன்' கவலை தோய்நத கமலாவிற்கு கண்ணன் ஆறுதல் கூறுகின்றான். அப்போது வீட்டு வாசல் புறத்தால 'எடியே கமலா என்னடி செய்யிறா' ஒரு குரலொலி கேட்கிறது. அது யாருமல்ல கமலாவின் கணவன் சுந்தரம்.

ஒரு காலத்தில் பெரிய சம்மாட்டியாக ஊரார் வாய் போற்றுமளவிற்கு உன்னத நிலையிலிருந்தவர் மககளிற்கு இல்லையெனாது செல்வத்தை அள்ளி வழங்கியவர். இன்று அழுக்கு நிறைந்த உடையுடன். தன்னை மறந்து மது போதையில் தள்ளாடி வருகிறார். "என்னப்பா இன்னடி குடிச்சு குடிச்சு உடம்ப கெடுத்துக்கறா" சுந்தரத்தை பார்த்து கவலையும் கோபமும் கலந்த உணர்வுடன் கமலா கேட்கிறாள் "சண்டையால சொத்து இழந்தோம். என்ர மூத்தபிள்ளைக்கு வருத்தத்திற்கு இருந்ததையும் இறச்சு அவளது உசிரையும் காப்பாற்ற முடியலேடி கடவுள் கைவிட்டிட்டாரடி அந்த கவலை தாங்க முடியாது தான் குடிக்கிறன்" என்றவாறு கண்ணீர் சொரிந்த சுந்தரம் மது போதையில் உளறினான். நடந்தது நடந்து போயிற்று எனி நடக்கப்போறதை பார்பமேன்' தந்தைக்கு அறிவுரை கூறியவாறு தோட்ட வேலை செய்வதற்காக மண்வெட்டியை தூக்கியவாறு நடக்கின்றான் கண்ணன். அந்ததத் தோட்டமோ அயலவர் ஒருவருடையது. நாள்கூலிக்காகவே அவன் அங்கு வேலை செய்கின்றான். நேரம் தவறாமையினால் அந்த அயலவர் கண்ணனில் நல்லன்பு வைத்திருந்தார். ஒரு நாள் கண்ணன்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# 31ம் நாள் நினைவலைகள்

**அருட்தந்தை கீதபொன்கலன் லக்ஸ்மன் அடிகள்**



அன்னை மடியில்
1979.10.12

அருட்பொழிவு
2011.05.18

ஆண்டவனடியில்
2012.11.14

வழிகாட்டி எம்மை வாழ்வித்த செல்வம்
தன் வரலாற்றை நிறைவு செய்து
வான் நோக்கிச் சென்றதையோ
வழிமேல் விழிவைத்து
வான்நோக்கியிருக்கின்றோம்
வாழ்வித்த எம் செல்வம் மறுபடியும்
வருமென்று

விக்கித்துப்போய் நிற்கின்றோம்
விம்மி அழ முடியவில்லை
விறைத்துப் போய் நிற்கின்றோம்
விடையேதும் தெரியவில்லை

அழுது தொலைத்து விட முடியாத சோகமிது
எம் உள்ளத்தில் உறைகிறது
இனி நீர் இல்லை எம்மோடு ஒருபோதும்
என்னும் உண்மை உள்ளத்தை
உலுப்புகின்றது

இறைவனின் திருவுளம் இதுவென்றால்
எம்மகனே ஏற்கின்றோம்
இறையவனில் இளைப்பாற்றி கண்டுவிடு
மகிழ்வாக நாம் வாழ வழிகள் செய்தாயே
எம்மகனே
சுகமாக நாம் இருப்போம்
தூயவனில் அமைதிகொள்

**ஆறாத்துயரில் கலங்கிநிற்கும்**
அன்பு
பெற்றோர்.சகோதர.சகோதரிகள்
உற்றார், உறவினர்கள்

# கிறிஸ்து பிறப்பு விழா வணிக விழாவா? வாழ்வு கொடுக்கும் விழாவா?

இன்னொருகிறிஸ்து பிறப்பு விழாவை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் விழாக்கள் வருவதும் போவதும் வாடிக்கையாகிவிட்டது திருவிழாக்களுக்கு மட்டும் எமது சமூகத்தில் ஏனோ திருவிழாக்கள் இன்றும் வழமை போல் சகட்டு மேனிக்கு வெளிப்படுத்தப்படும் வெளியரங்க ஆரவாரங்களுடனும் அமர்க்களங்களுடனும் வானவேடிக்கைகளுடனும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. இதுமட்டுமா விழாக்களின் பெயரால் நடைபெறும் களியாட்டங்கள், கேளிக்கைகள் என்றெல்லாம் நடந்தேறுகின்றது. ஒரு சமூகப் பார்வையில் இவை ஒருசமூகக் கொணடாட்டங்களாக நோக்கப்படலாம். உதாரணமாக திருமணம், பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்ற சமூக நிகழ்வுகள் கொண்டாடப்படுவதில் எத்தகைய தவறும் இருக்க முடியாது. ஆனால் ஆலயங்களில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் அவற்றின் உள்நோக்கத்தை நிறைவு செய்கின்றதா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது. ஏனெனில் இவற்றிற்காக சில வேளைகளில் பெருமளவு பணம் செலவழிப்பது தான் பிரச்சினையாக உள்ளது. இன்று சிலபத்திரிகைகள் பெரும்பாலும் பாராட்டு விளம்பரங்களைத் தாங்கி வருவதைக் காணலாம். வாழும்போதே சாதனைகளைப் பாராட்டுவது நல்லது தான். ஆனால் கண்டதையெல்லாம் பாராட்டிவிளம்பரம் செய்வதால் பாராட்டுக்களுக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். இதைப் போன்று தான் சிலவேளைகளில் ஆலயதிருவிழாக்களும் மேலோட்டமாக விளம்பரப்படுத்துவதாக அமைந்துவிடுகின்றன. திருவிழாக்கள் குறிப்பாக ஆன்மீகத்தை மையமாகவைத்தே சமூக ஒன்றிப்பை, உறவுகளின் சங்கமத்தை, ஒரே சமூகமாக வழிபடுதலை வெளிப்படுத்தும் உள்ளரங்கப் புதுப்பித்தலுக்கான நிகழ்வுகளாக வெளிப்படுத்தப்படவேண்டும். மாறாக வெளியரங்கக் கொண்டாட்டங்களோடு வாழ்வைத் தொடாத வகையில் நிறைவுபெற்று விடுகின்றன. இதற்குகிறிஸ்து பிறப்பு விழாவும் விதிவிலக்கானது அல்ல.

### கிறிஸ்து பிறப்பு விழா வணிக விழாஅல்ல!

கிறிஸ்து பிறப்புவிழா இன்று பெரும்பாலும் வணிக விழாவாக மாற்றப்பட்டுள்ளது. இறுதிகாலத்தில் விற்பனையாகும் அலங்காரப் பொருட்கள், மின் விளக்குகள், கேக் வகைகள் இன்றும் வெளியரங்குகளில் விற்பனைக்கு வரும் பொருட்கள் எல்லாம் கிறிஸ்து பிறப்பு விழாவை வியாபாரமாக்கி விட்டது. ஆனால் விழாவிற்கு நுகரப்படும் பொருட்கள், தேவைகளே முதன்மையாகின்றன, இதனால் ஒரு அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பு விழாவாக வெளியரங்கக் கொண்டாட்டங்களுடன் நிறைவு பெற்று விடுகின்றது. உண்மையில் கிறிஸ்து பிறப்பு விழாமனித இதயங்களின் சங்கமிப்பை, பகிர்வை, உறவை வளர்க்கும் விழாவாகவே கொண்டாடப்பட வேண்டும். கடவுள் மனிதனாக மனுவுருவெடுத்து மனிதகுலத்தின் விடிவிற்காக,வாழ்விற்காக, மண்ணிற்கு வந்த உன்னதமான நிகழ்வின் அர்த்தமும் உட்பொருளும் வெளியரங்கக் கொண்டாட்டங்களால் மூடிமறைக்கப்படுகின்றது. மனித சமூகத்தில் கொண்டாட்டங்கள் மனிதஉறவுகளின் அடையாளங்களாகும். இன்றைய காலகட்டத்தில் சுயநலமும் பகைமையும் வன்முறைகளும் பெருகி வரும் நிலையில் கிறிஸ்து பிறப்பு விழா பகிர்வையும் ஒன்றிப்பையும் அமைதியையும் வெளிப்படுத்துவதாக அமையவேண்டும். இருளகற்றி வாழ்வில் ஒளியை ஏற்றவந்த இறைமகன் இயேசுவின் பிறப்பு இன்று பல்வேறு தீமைகளுக்கு அடிமையாகி இருளில் வாழும் அனைவருக்கும் விடுதலை விழாவாக மாற வேண்டும். எமது சமூகத்தில் இன்று வேகமாகப் பரவிவரும் குடிவெறி, வன்முறைகள், வன்புணர்வு போன்ற தாக்கத்திலிருந்து மீண்டெழ கிறிஸ்து பிறப்புவிழா வழி சமைக்கவேண்டும். ஆனால் கிறிஸ்து பிறப்புவிழாகாலத்தில் தான் குடிவகைகளின் பரிமாற்றமும் கேளிக்கைகளும் களியாட்டங்களும் நிறைந்து, இருளடைந்த வாழ்விற்கு இட்டுச் செல்வதையே காணுகின்றோம். நாம் கொண்டாடுகின்ற எந்தவொரு விழாவிற்கும் அர்த்தம் வேண்டும், உடபொருள் வேண்டும்.

### கிறிஸ்துவின் மனுஏற்பின் அர்த்தம் என்ன?

**அலசலும் உரசலும் 13**

**(சமகால சமூக ஆன்மீக தொடர்)**

**அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.**

கடவுள் மனிதனாக மனுஏற்று மண்ணுலகில் பிறந்தது மனித குலத்திற்கு இறைவன் அளித்தமாபெரும் கொடை என்றால் மிகையாகாது. இறைவன் தன்னையே எம்மோடு பகிர்ந்து வாழ்ந்தது மனிதகுலத்தின் மாண்பையுணர்த்திய செயலாகும். இதனையே நற்செய்தி ஆசிரியர் யோவான் "வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்" *(யோவான்1:14)* என்று கூறுகின்றார். கடவுள் எதற்காக மனிதகுலத்தோடு ஒன்றித்தார் என்பது முக்கியமானதாகும். உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலைக் கொண்டிருப்பவன் தான் ஆனால் பாவவீழ்ச்சிக்கு பின்பு மீட்பரை அனுப்புவதாகக் கடவுள் கொடுத்தவாக்குறுதி இயேசுவின் மனுஏற்பில் நிறைவேறியது. எனவே மனு ஏற்பின் மூலம் அனைவரும் கிறிஸ்துவின் சகோதரர்கள் ஆகின்றோம். இது ஒரு அனைத்துலக சகோதரத்துவத்திற்கான (Universal Brotherhood) அழைப்பாகும். இன்று இயேசு பிறந்த மண்ணில் அமைதியுமில்லை, சகோதரத்துவமும் இல்லை. பாலஸ்தீனியர்களுக்கும் யூதர்களுக்குமிடையே ஓயாத போரும் வன்முறைகளும் தொடர்கின்றன. அதேபோன்று உலகெங்கிலும் பிரிவினைகளும் பாகுபாடுகளும் சண்டைகளும் தொடர்கின்றன. இன்னும் பிறந்த இயேசு மனித இதயங்களில் குடிகொள்ளவில்லை என்பது போலத் தான் தென்படுகின்றது. ஏன்? கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் எமது தேச மக்களிடையே கூட ஒற்றுமை இல்லை. நமது தேசத்தில் கிறிஸ்தவர்களாய் வாழும் இரு இனங்களிலுள்ளவர்கள் ஒன்றித்து, சகோதரத்துவத்திலும் நீதியிலும் வாழும் நிலையை காண முடியாதுள்ளது. இனரீதியாகப் பிரிந்து வாழும் நிலையைத்தான் கண்கூடாகக் காண்கின்றோம். உண்மையான சகோதரத்துவம் சமத்துவத்தில் உருவாகும் என்பது தான் உண்மை இன்று திருச்சபையில் போதனைகளுக்குக் குறைவில்லை சாட்சிய வாழ்வுக்குத் தான் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து பிறப்பு விழாநாம் வாழும் சமூகத்திலே சகோதரத்துவத்தை, சமத்துவத்தை, இரக்கத்தை வெளிப்படுத்தும் விழாவாக மாறவேண்டும்.

### 2012 இல் கிறிஸ்து பிறப்பு விழா

இன்று எமது சமூகத்தில் ஏற்படும் உலகியல் சார்ந்த மாற்றங்கள் வாழ்வு அளிப்பதாக இல்லை. நுகர்வுக் கலாச்சாரம், தொடர்பாடல் சாதனங்களின் ஆக்கிரமிப்பு, சுயநலம் சார்ந்த மதிப்பீடுகள் எல்லாம் இறைவனோடு தொடர்பில்லாமல் இவ்வுலகில் மகிச்சியாக வாழலாம் என்ற தவறான சிந்தனையின் அடித்தளத்தில் எழுவதாகதெரிகின்றது. இது மனித இயல்பின், படைத்தவரின் நோக்கத்திற்கு எதிர்மாறான அடிப்படைத் தவறாகும். கிறிஸ்தவம் பெறும் பக்திமயப்பட்ட, திருவிழாசார்ந்த, சில மதக் கடமைகள் சார்ந்த மதமாகக் கடைப்பிடிக்கப்படும நிலையே இன்று காணப்படுகின்றது. வாழ்வைத் தொடாத, மனித மனங்களில் மாற்றம் ஏற்படுத்தாத கிறிஸ்தவ வாழ்க்கை முறையே நடைமுறையில் உள்ளது. கிறிஸ்து பிறப்பு விழாவும் வழமை போன்று வெளியரங்கக் கொண்டாட்டங்களோடு எதுவித உள்ளரங்க ஆயத்தமுமில்லாமல நிறைவு பெறப் போகின்றதா? அல்லது எமது இதயத்தை ஆய்ந்து பார்த்து இறைமகன் இயேசுவை இதயமதில் வரவேற்கக் கூடிய உள்ளமாக மாற்றியமைக்கும் மனமாற்றத்தின் காலமாக இருக்கப் போகின்றதா? இன்று போரினால் இழந்தவர்கள் எத்தனை பேர் இன்று சமூகத்தில் துயரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களோடு எம்மை, எமது ஆற்றல்களை, இருப்பதைப் பகிர்ந்துவாழும் வாழ்வளிக்கும் விழாவாக கொண்டாடப் போகினறோமா? இன்று போதனைகளைவிட சாட்சியமுள்ள சாரமுள்ள வாழ்வே தேவை! இறைமகன் கிறிஸ்து எம் இதயங்களில் பிறக்க, அதற்குத் தடையாயிருக்கும் தீமைகளை முதலில் இறையருளின் துணையோடு நீக்கி வாழும் போதே, நன்மனத்தோருக்கு இயேசுவின் பிறப்பின் போது இறைவன் உலகிற்கு அளித்த உன்னத கொடையாகிய அமைதி எங்கள் உள்ளத்தில் தங்கும். உள்ளத்தில் அமைதியில்லாமல், குடும்பங்களில் சமாதானம் இல்லாமல், அடுத்தவரோடு உறவில்லாமல கிறிஸ்து பிறப்பு விழாவை உண்மைத்தனமான முறையில் கொண்டாட முடியுமா? இதற்கான விடை எம்மிடமே உள்ளது. ஏதோ பிறந்தோம், வாழ்ந்து முடிப்போம் என்றல்லாமல் அர்த்தத்தோடு வாழ இறைவனை மையப்படுத்தி, அடுத்தவரை மையப்படுத்தி வாழுவோம் இத்தகைய வாழ்வே, வாழ்வு அளிக்கும் கிறிஸ்து பிறபபு விழாவாக நாம் கொண்டாட எம்மை மாற்றியமைக்கும்.

## இறைமகன் கிறிஸ்து மரிமகனாக மண்ணகம் மலர மாட்சியுடன் வரவேண்டும்

பாவங்கள் பெருகி மண்ணில் பாமரர் அழிகின்றார்கள்
நாவல்லோர் வாழ்கின்றார்கள் நச்சுவாய் இருந்த போதும்
காவல் செய்வோர் நாட்டை கவிழத்துப் பாழ் செய்கின்றார்கள்
தேவரீர் மனுமகனாக எம்மைத் தேற்றிட வந்தருள்வீரே

திருடர்கள் பெருகிவிட்டார் தேசம் எல்லாம் பொல்லார் பாதம்
வருவோர் மட்டும் வாழும் வழமை நிலை பெருகிற்று ஐயா
பொருள்தனில் ஆசை வைத்தோர் புவிதனை வீழ்த்துகின்றார்
அருள் ஒளி ஏற்றி வைக்க அன்னை மகனாக வந்தருளும்

கன்னியர் கற்பினுக்கும் காவலே இல்லை அன்பின்
தன்னிழல் தருவதற்கும் தயங்குவோர் அதிகம் அப்பா
முன்னிழல் இருந்தும் கீழே முள்ளெனில் எவர் நிற்பார்
இன்னருள் பொழிவதற்கே இறங்கியே வாரும் தேவா

பழிப்பறிவில்லா மக்கள் பசியினால் மடிகின்றார்கள்
குடிவெறிப் பக்கத்தாலே கோதையர் துடிக்கின்றார்கள்
நடிப்பவர்கள் நலம் செய்வார் போல் நாட்டினைக் கெடுக்கின்றார்கள்
அடிப்படை மாற வேண்டும் ஆண்டவரே விரைந்து வாரும்

கொலை கொள்ளை சூது வஞ்சம் கொடுஞ்செயல் பெருகி எந்த
விலை கொடுத்தேனும் போதை விழைகின்ற பாதையைத்தான்
கலை வாழ்க்கை என்றே எண்ணி காளையர் அழிவை நோக்கும்
நிலை தன்னை மாற்றி அமைக்க நெடியவா வருதல் வேண்டும்

எடை ஏய்ப்பு கலப்படங்கள் இடையிடையே விலையேற்றங்கள்
கடைகளில் பதுக்கல் கொள்ளை காசுகள் திரட்டுவதற்கே
தடையின்றி எத்தீமைக்கும் தயங்காமல் முனைகின்றார்கள்
உடையவர் தாமே நீவீர் இடர் நீங்கிட வரவே வேண்டும்

பழி இன்றி நீக்கும் பொருட்டு இறையே பாருலகில் விரைந்து வாரும்
இழி பாவத்தாலே மாந்தர் இனமெல்லாம் நசிந்தே அழியும்
விழி பொங்கும் அருள் நிறைந்தீர் விரைந்து இவண் வந்தாலன்றி
ஒளி நிலை பெறாது இவ்வையகம் தவிக்கின்றோம் வருக இறையே

சொந்தத்தாய் வயிற்று மக்கள் சொத்தெனும் பேராசையினால்
எந்தத் தீச்செயலும் இயற்றிடவே தயங்க மாட்டார்
சந்தையில் கூச்சல் போல் சாதியின் சண்டைப் பேச்சும்
விந்தையாய் இந்த மண்ணில் விலகி ஓட விளையாடல் புரியும் ஐயா

மன்றாடுகின்றோம் தந்தாய் எம் மண்ணில் நன்மை விளைய
இன்றே உமதருளை நிறைவாகப் பொழிந்திட இறங்கி வாரும்
ஒன்றிய திருக்குடும்பம் உயர் சூசை மரியன்னையுடன்
மன்றிய மாட்டுத்தொழுவம் மாண்புடன் மிளிர மன்னவன் இயேசுவே வாரும்

– வன்னி வாழ் இதயம் ம. சூசைமுத்து –

### மார்கழியில் உலகம்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அழிவுகளினால் வெளிப்படும் இறைவனின் செய்தியை புரிந்து கொண்டு வாழ முயற்சிக்கின்றேனா? உளி படாமல், காயப்படாமல் ஒரு அழகிய சிலையை உருவாக்க முடியாது. அதே போல காலத்தின் அறிகுறிகளை உய்த்துணர்ந்து, துன்பங்கள் துயரங்களால் புடமிடப்பட்டே இறைநம்பிக்கை உறுதி பெறுகின்றது. இயறகை அழிவுகளினூடாக விடுக்கப்படும் எச்சரிக்கை செய்திகள் அழிவிற்கான வாயிலை திறந்து வைப்பதற்காக விடப்படுபவையல்ல, மாறாக நாம் எமது வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்து, நல்லதொரு வாழ்க்கையை அமைத்து, இறைவனிடம் திரும்பி வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகவே இதை உணருவது தான் இன்றைய தேவையாகும். உலகம் இறைவன் திட்டப்படி, அவர் விரும்புகின்ற நேரத்தில் அழியலாம் அல்லது புதுப்பிக்கப்படலாம். அது நமது பிரச்சினையாக இருக்க முடியாது. இன்று மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை. நம்பிக்கை ஆண்டில் பிரவேசித்திருக்கும் நாம் நம்பிக்கை வாழ்வையும், ஒழுக்க வாழ்வையும் இணைத்து இறைவனை நோக்கிய பயணத்தில தடைகளை தாண்டி இறையருளோடும், இறைவல்லமையோடும் பயணிப்பதே நிகழ்காலத்தின் தேவையாகும்.



## திருத்தந்தையின் நத்தார் செய்தி

உலகம் முழுமையிலும் எனக்கு செவிமடுத்துக் கொண்டிருக்கும் அன்பு சகோதர சகோதரிகளே, கடவுள் மனிதனாகி நம்மிடையே குடிகொண்ட கிறிஸ்து பிறப்பு செய்தியை உங்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ் வடைகின்றேன். "இம்மானுவல் - கடவுள் நம்மோடு" என்பது அனைத்து மக்களுக்கும் ஒளியும் மனிதகுலத்தின் ஒன்றிணைந்த பயணத்திற்குமான நம்பிக்கையுமாகும்.

நீதி மற்றும் அமைதியின் மன்னராக வந்த இயேசுவின் அரசு இவ்வுலகை சாா்ந்தது அல்ல என்பது எமக்குத் தெரிந்திருப்பினும் இவ்வுலக அனைத்து அரசுகளுக்கும் அதுவே புளிக்காரமாய் உள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது. தன்னலமற்ற அயலவா் பணி, நீதிக்கான அமைதிப் போராட்டம் என்பவற்றின் ஊடாக அமைதியின் அரசை கட்டியெழுப்ப வருகை தந்த இயேசுக்கிறிஸ்து நமது வரலாறுகளிலும் நம்மோடு இணைந்து செயலாற்றுகின்றாா் பயணிக்கின்றாா் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. யாருடைய மாண்பு மீறப்பட்டு காயப்படுத்தப்படுகிறதோ அவா்கள் நீதியான அமைதி பெறவும் அனைத்து அடிமைத்தனங்களிலிருந்தும் மனுக்குலம் மீட்புப்பெறவும் மூலகாரணராக கிறிஸ்து பெத்தலேகேமில் பிறந்தாா். அவரது சமாதானம் போரினாலும் பேரிடா்களினாலும் இயற்கை அனா்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு கிடைப்பதற்காக திருச்சபையும், மதத்தலைவா்களும் உலகநாடுகளின் தலைவா்களும், மக்கள் அனைவரும் உண்மையாக உழைக்க வேண்டும்.

மலருகின்ற நம்பிக்கையாண்டில் நாம் அனைத்து சவால்களையும் எதிா்கொண்டு பயணிக்க நமது இதயங்கள் பெத்தலகேம் மாட்டுத் தொழுவத்தில் ஒளிரும் ஒளியினால் நிறையட்டும். அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

**திருத்தந்தை 16வது பெனடிக்ற்**

## யாழ். ஆயரின் நத்தார் விழாச் செய்தி



இன்பமாய் இருக்க ஏங்கும் மனிதன் பொருள் ஈட்டுவதால் அதனை அடையலாம் என்று எண்ணுகின்றான். புகழ் ஈட்டுவதால் தன்னை உயா்த்திக் கொள்ளலாம் என்று மயங்குகின்றான். ஆனால் ஏமாற்றம் தான் அவனுக்கு கிடைக்கும் பதில். மனிதன் தேடும் இன்பத்தை இறையருளால் என்றும் பெற்றுக்கொள்ளும் வாா்த்தையாக இறைவன் மனிதனானாா். பெத்தலகேம் என்னும் சிற்றூரில் தூய சூசைக்கும் மரியாவுக்கும் குழந்தையாக பிறந்த இயேசு மனித மாண்புடன் வாழ்ந்து இன்புற வழிகாட்டுகின்றாா். இதைத்தான் ஒவ்வொரு நத்தாா் விழாவும் நமக்கு நினைவூட்டுகின்றது.

அனைத்திலும் செல்வராக இருந்த ஆண்டவா் எமக்காக வறுமையுற்றாா். நம்பிக்கையின் ஆண்டாக அனைத்துலக திருச்சபை அறிவித்துள்ள இவ்வருடத்தில் மனிதத்தில் நம்பிக்கை இழந்து பரிதவிக்கும் மனிதன் இறைவனின் அளப்பரிய அன்பை இரக்கத்தை மீண்டும் மீண்டும் சிந்தித்து உயா்வடையவும் இறைவனிடம் திரும்பி திருந்தி வரவும் எமக்கு அழைப்பு விடுக்கின்றாா்.

நத்தாா் பெருவிழாவை கொண்டாடும் இத்தருணத்தில் ஏழைகள், அனாதைகள், அங்கவீனா், இல்லிடமற்றோா், மீள்குடியேற்றத்தினால் துன்புறுவோா் மீது கருணையும் அன்பும் கொண்டு பிறரன்பு, பகிா்வு போன்ற செயற்பாடுகளில் நாம் இணைவோம்.

எமது உயா்வான வாழ்விற்காக குழந்தையாக பிறந்த இயேசு உங்கள் அனைவருக்கும் உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதியும், மகிழ்ச்சியும் கொடுத்து உங்கள் குடும்பங்களை ஆசீா்வதிப்பாராக.

**அதிவணக்கத்துக்குரிய**
**இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
**யாழ். ஆயா்**

## குருமுதல்வரின் கிறிஸ்மஸ் செய்தி



"வாா்த்தை மனுவுருவானாா்" இவ் உண்மையின் ஒளி இதனை விசுவாசமுடன் பெறுபவருக்கு வெளிப்படுத்தப் படுகிறது. ஏனெனில் இது அன்பின் மறை உண்மை. அன்பிற்காக தம் உள்ளங்களை திறப்பவா்கள மட்டுமே கிறிஸ்மஸ் ஒளியால் சூழப்படுகிறாா்கள். இன்றைய நவீன உலகில் மிகவும் தட்டுப்பாடாக அருகி விட்ட ஒரே ஒரு பொருள் அன்பு என்றால் அதில் மிகை ஏதும் இல்லை. வன்முறைகளும் வன்முறைகலாச்சாரங்களும் தீய நடத்தைகளும் அரங்கேற்றப்பட்டு வரும் இவ்வுலகில் இயேசுவின் பிறப்பு எல்லோருக்கும் அா்த்தமுள்ளதாக அமைய வேண்டும் எனில் அனைவா் உள்ளங்களும் அன்பினால் நிறைய வேண்டும். இரத்தத்தை சுரக்கும் எம் இதயத்திற்கு அன்பை சுரக்க" இறைவன் வரம் அளிக்கும் ஓா் நன்நாளாக கிறிஸ்மஸ் தினம் நம் ஒவ்வொருவருக்கும் அமைய வேண்டும்.

பல்வேறுபட்ட இன்னல்களுக்கு ஊடாக பயணித்த இஸ்ராயேல் இனம் இறுதியில் இன்ப கானானை கண்டடைந்தது என்றால் அதற்கு அவா்கள் இறைவன் மீது கொண்ட விசுவாசமும் தம் வாழ்வில் ஏற்படுத்திக் கொண்ட நம்பிக்கையுமே காரணம் ஆகும். தமிழ் மக்களாகிய நாங்களும் நாம் சந்தித்த சந்திக்கும் இன்னல்களுக்கு மத்தியில் ஒளியாம் இறைவனை பற்றிக்கொண்டு நம்பிக்கை ஆண்டில் நம்பிக்கையுடன் பயணித்து இன்பக் கானானை கண்டடைய எனது ஆசீரையும் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**அருள்முனைவா் யஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**குருமுதல்வா் - யாழ் மறைமாவட்டம்**

## திருத்தந்தையினால் பதவி உயா்வு பெற்றாா் மொன்சிஞ்ஞோா் கமிலஸ் நிமலன் அடிகளாா்



வத்திக்கானின் நற்செய்தி அறிவிப்பு சபையில் (Congregation for the Evangelization of Peoples) பணியாற்றி வரும் யாழ். மறை மாவட்டத்தைச் சோ்ந்த மொன்சிஞ்ஞோா் கமிலஸ் நிமலன் யோண்பிள்ளை அடிகளாா் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவா்களால் பதவி உயா்வு பெற்றுள்ளாா். கடந்த நவம்பா் 21ம் திகதியன்று இச்சபையின் அலுவலக தலைமை அதிகாரியாக (Capo ufficio – Office Head) திருத்தந்தை இவரை நியமித்துள்ளாா். வத்திக்கான் அலுவலகங்களிலுள்ள மிகமுக்கியமான அதியுயா் பதவிகளுக்குரிய அதிகாரிகள் திருத்தந்தையினால் நேரடியாக நியமிக்கப்படுகிறாா்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மொன்சிஞ்ஞோா் கமிலஸ் நிமலன் அடிகளாா் உரோமை பல்கலைக்கழகங்களில் கோட்பாடு இறையியல் துறையிலும் (Dogmatic Theology) திருச்சபைச் சட்டத்துறையிலுமாக (Canon Law) இரண்டு கலாநிதிப் பட்டங்கள் பெற்றவராவாா்.

இவா் திருத்தந்தையிடமிருந்து பெற்றுள்ள இப்பதவி உயா்வு குறித்து யாழ். மறைமாவட்டம் பெருமையடைவதோடு பாதுகாவலனும் தனது வாசகா்களோடு இணைந்து அடிளாருக்கு தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## வாழ்த்துகின்றோம்



யாழ் மறைமாவட்ட குரு அருட்பணி ப. ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாா் தமது குருத்துவ வெள்ளிவிழாவை இவ்வாண்டில் நினைவு கூறுகின்றாா். தற்போது புனித சவேரியாா் குருத்துவக் கல்லூாயில் உபஅதிபராக பணியாற்றுக்கின்ற அடிகளாா் கடந்'த சில ஆண்டுகளாக ரோமாபுரியில் பாப்பிறையின் திருச்சிலுவை பல்கலைக்கழகத்தில் (Pontifical University of the Holy Cross) கோட்பாட்டு இறையியல் துறையில் (Doctorate in Dogmatic Theology) கலாநிதிப் பட்டம் பெற்றவா் ஆவாா். அவருடைய முனைவா் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை வத்திக்கான் சங்கத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் திருச்சபையின் அருட்சாதனத்தன்மை (The Sacramentality of the Church in the Post-Conciliar Period) எனும் தலைப்பில் அமைந்திருந்தது. அருட்தந்தை அவா்கள் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் கடந்த காலத்தில் கடமையாற்றியுள்ளாா். குருத்துவ வெள்ளிவிழா ஆண்டில் முனைவா் பட்டம் பெறும் அடிகளாரை பாதுகாவலன் வாழ்த்தி மகிழ்கின்றது.

## ஆசிரியரின் இதயத்திலிருந்து...

வாசக நெஞ்சங்களே!
தமிழ் மக்கள் எமது
இயல்பு வாழ்க்கைக்கு
குழிகள் வெட்டப்படுகின்றன
நம்பிக்கை எம் அகராதியில்
தேய்பிறை அல்ல
பௌா்ணமி நிலவு என்பதை மறவோம்
நமது சமூகத்தை
நல்வழிப்படுத்தும்
ஊக்க மருந்துகளாக நாம் மாறி
விழிப்புணா்வின் விழிகளோடு
நம்பிக்கை நங்கூரமிட்டு
புதிது நினைக்க
புதிது புனைய
புனித இரவின்
பூபாள இராகம் கேள்
நத்தாா் புதுவருட நல்வாழ்த்துக்கள்!



**அருட்பணி. எஸ்.ஏ.றொஷான்**
**-ஆசிரியா் பாதுகாவலன்-**

### பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு புதுவருட விழாத்திருப்பலி

| கிறிஸ்து பிறப்பு | புதுவருடம் |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி : நள்ளிரவு 11.45 | நள்ளிரவுத் திருப்பலி : |
| (ஆயா் தலைமையில்) | நள்ளிரவு 11.45 |
| 1ம் திருப்பலி : காலை 6.00 | 1ம் திருப்பலி : |
| 2ம் திருப்பலி : காலை 7.15 | (ஆயா் தலைமையில்) |
| நன்றி வழிபாடு : | காலை 6.00 |
| 31.12.2012 மாலை 4.30 | 2ம் திருப்பலி : காலை 07.15 |


வரைவு: சகோ றனில்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

மீள் குடியேற்றம் என்று சொல்லி தூக்கி
வீசப்பட்டோம் நடு வீதியில்
சிதைந்த வீட்டோடு எம்
உறவுகளும் மடிந்து போயின
கண்ணிகள் காலம் பாா்த்து எம்மை
மௌனமாய்ச் சுற்றியிருக்க
ஏக்கத்துடன் ஏதிலிகளாய் - சிறு
தறப்பாள் கொட்டிலுக்குள் நாமிருக்க
எம்மை உருக்குலைத்த குண்டை
உடைத்து நீ வந்தாயோ பாலகனே
உரிமை வாழ்வை எமக்குத் தர!

அருட் சகோ. யு. துஷியந்தன்